# பொருளாதார சூறுவளியில்

# யூ.என்.பி. ஆட்சி


# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 6 | இதழ் 57 | நவம்பர்24 1967 | பக்கங்கள்12 | விலைசதம்15


**டட்லி-ஜே. ஆர் மோதலினாலும், தமிழரசுக் கட்சியின் வெளியேறும் பயமுறுத்தலினாலும் நெருக்கடிக்குள்ளாகியிருந்த யு. என். பி. அதிலிருந்து மீட்சியடைவதற்குள் மீண்டும் பயங்கர பொருளாதார சூறுவளியில் சிக்கிக் கொண்டுள்ளது.**

எமது ரூபா நாணயம் மிகவும் இறுக்கமாக பிணைக்கப் பட்டுள்ள ஸ்டர்லிங் பவுனின் (பிரிட்டிஷ் நாணயம்) மதிப்பு குறைக்கப் பட்டுள்ளது என்ற செய்தியே இதற்குக் காரணமாகும். முதலாளித்துவ உலகத்தில் இரண்டாவது ஸ்தானத்தில் நின்று ஆதிக்கம் செலுத்திய, செல்வாக்குமிக்க ஸ்டர்லிங்கின் மதிப்பு குறைக்கப்பட்டமை உலக முதலாளித்துவத்திற்கு குறிப்பாக பிரிட்டிஷ் முதலாளித்துவத்திற்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எடுத்துக் காட்டுகிறது.

ஸ்டர்லிங் நாணய மதிப்பு குறைக்கப்பட்டுள்ளதென்றால் அதன் அர்த்தம் ஸ்டர்லிங் பவுனின் மதிப்பு குறைந்து விட்டது என்பதேயாகும். இதற்குக் காரணம் என்னவெனில் பிரிட்டன் குறைவாக உற்பத்தி செய்கிறது. கூடுதலாக இறக்குமதி செய்கிறது. அதன் மூலம் செலவாணி பரிவர்த்தனையில் அதற்கு சாதகமற்ற நிலை உள்ளது. ஆகவே ஸ்டலிங்கை கமலிவாக்குவதன் மூலம் ஏற்றுமதியை அதிகரிக்க ஊக்கமளிக்கும் முயற்சியாகும். (அதாவது வெளி உலகில் பிரிட்டிஸ் பொருட்களை மலிவாக் விற்பதாகும்.) இந்த நடவடிக்கையுடன் சம்பள உயர்வுத் தடுப்பு. போன்ற பொது மக்களின் ஆதரவு பெறாத பல நடவடிக்கைகளும் உள்ளன.

துள்ள எமது பொருட்களின் விலை மேலும் மேலே சென்று விட்டது. அரசாங்கம் விலைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தவும் (இது எப்பொழுதும் எழுத்தளவிலே நின்றுவிடும்) எப்பொழுதும் அவசியமாகியுள்ள கள்ளப் பதுக்கல்களைத் தடுக்கவும் நடவடிக்கை எடுப்பது பற்றி சிந்திக்கிறது.

மட்டுமல்லாமல் அவற்றின் ஏற்றுமதிகூட பிரிட்டிஷ் ஏஜன்ஸி ஸ்தாபனங்களின் ஆதிக்கத்திலுள்ளன. இவ் ஸ்தாபனங்கள் இத்தேயிலையை மீண்டும் பிரிட்டனிலிருந்து டொலர் (அமெரிக்க நாணயம்) சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் மிகப் பெரும் லாபத்தைப் பெறுகின்றன என்பது அண்மையில் வெளியாகியது. அதன்மூலம் நேரடியாக இலங்கைக்கு வரவேண்டிய மிகவும் அவசியமான டாலர் லாபத்தை இவ்ஸ்தாபனங்கள் அடைகின்றன.

## கொள்ளை லாபமடிக்கும் பிரிட்டிஷ் ஏஜென்ஸிகள்

இவ்வித நடவடிக்கைகள் எதிர்பார்த்த மாற்றத்தை பிரிட்டிஷ் பொருளாதாரத்தில் ஏற்படுத்துமா என்பது வேறு பிரச்சினை. இங்கு நாம் கவனிப்பது என்னவெனில் இந்த நடவடிக்கையின் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்பு யாது என்பதேயாகும். ஏற்படும் பாதிப்பு பெரும் பாதகமானது என்பது எவருக்கும் எளிதில் விளங்கும். உயர்ந்

## விமோசனம்காண பிரிட்டிஷ்

## ஏகாதிபத்திய ஆதிக்கம்

## ஒழிய வேண்டும்

இதற்குக் காரணம் என்னவெனில் உண்மைகளை மறைக்க சுதந்திரம் என்ற துண்டு சீலை பாவிக்கப்பட்ட பொழுதிலும் எமது பொருளாதாரம் இன்னும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பது நிர்வாண உண்மையேயாகும். எமக்கு அதிக வெளிநாட்டு செலவாணியைத் தேடித் தருவதான தேயிலை உற்பத்திமட்டத்திலேயே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு சொந்தமாக உள்ளது

ஆகவே முதலில் சிந்திக்க வேண்டியது என்னவெனில், எமது நாணய மதிப்பீட்டை, குறைக்க வில்லையானல் எமது தேயிலை ஏற்றுமதிக்கு என்ன நடக்கும் என்பதாகும். உதாரணமாக இன்றுவரை எமது தேயிலை 20 கோடி பவுணை பிரிட்டனில் பெற்றிருந்தால் இனிமேல் இதிலும் கூடுதல் விலையைப் பெறும். ஆனல் அதே ஸ்டர்லிங் மூலம் ஸ்டாலிங் நாணய பழக்கமற்ற நாடுகளிலிருந்து குறைந்தளவு இறக்குமதிப் பொருட்களைத் தான் பெறமுடியும். அதன் காரணமாக எமது இறக்குமதிப் பொருட்களின் விலை 17 சத வீதம் அதிகரிக்கும்.

மறுபக்கத்தில் நாமும் எமது நாணயத்தின் மதிப்பீட்டை பிரிட்டன் அளவு குறைத்தால் எமது தேயிலை இப்பொழுது பெறும் அளவு ஸ்டர்லிங்கைப் பெறும். ஆனல் நாம் ஏனைய பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் விலை அதிகரிக்கும் ஸ்டர்லிங் பாவனை இல்லாத பகுதிகளிலிருந்து நாம் இறக்குமதி செய்யும் பொருட்களின் விலையிலும் பிரிட்டனிடமிருந்தும் நாணய மதிப்பு குறைக்கப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் விலை குறைவாக இருக்கும்.

நாணய மதிப்பு குறைக்கப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதை நாம் செய்தவுடன் மதிப்புக் குறைக்கப்பட்ட ஸ்டர்லிங் பகுதிகளிலிருந்து நாம் வாங்கும் பொருட்களின் விலை டாலர் பகுதிகளிலும் பார்க்க குறைவாக இருக்கும்.

எப்படிப் பார்த்தாலும் இலங்கை பெரும் பாதகமான சூழ்நிலையைத்தான் எதிர்நோக்கியுள்ளது. எமது ஏற்றுமதிப் பொருட்களின் முக்கியமாக ஸ்டர்லிங் பகுதிகளுக்கு அனுப்பப்படும் பொருட்களின் உண்மையான விலை வீழ்ச்சியடையும். அதே நேரத்தில் ஸ்டர்லிங் பகுதிகளுக்கு அப்பாலிருந்து வருகின்ற எமது இறக்குமதிப் பொருட்களின் விலை உயரும். வாழ்க்கைச் செலவு மேலும் உயரும். மக்களின் வாழ்க்கைத் தரம் குறிப்பாக குறைந்த வருமானம் பெறுபவர்களாகிய தொழிலாளர் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் குறையும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடம் தொடர்ந்தும் நாம் தங்கியிருந்ததன் பலன்தான் இது. இந்தப் பிடியிலிருந்து நாம் எம்மை விடுவித்து பரந்துபட்ட தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வரைக்கும் இந்த கேவல நிலையிலிருந்து மீட்சி பெற முடியாது.

ஆகவே பிரிட்டிஷ் சந்தைகளில் பொருட்கள் வாங்குவது மலிவாக இருக்கும்

## ஆங்கிலோ-அமெரிக்க மோதல் தீவிரமடைகிறது

அதன் காரணமாக இலங்கையின் மேல் உள்ள ஆங்கிலோ - அமெரிக்க மோதல் மேலும் தீவிரமடையும். எமது

## உட்கட்சி மோதல்

யு. என். பி. தமக்குள்ளேயே படுமோசமாக பிளவு பட்டு நிற்கையில்தான் இந்

தச் சூறுவழி யு. என். பி.யைத் தாக்கியுள்ளது. கடந்த 9-ம் திகதி நடந்த யு. என். பி. பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் நடத்திய கைகுலுக்கல்களும் கட்டித் தழுவுதலும் 'அன்பு' வார்த்தைகளும் விசுவாச பிரமாணங்களும்கூட யு. என். பி. தலைமையிலேற்பட்டுள்ள, கூர்மையடைந்துள்ள பிளவை—அமெரிக்க பிரிட்டிஷ் பாதந்தாங்கிகளின் பக்கவாட்டு ஓட்டங்களை மூடி மறைக்க உதவாது.

டட்லி—ஜே. ஆர் மத்தியிலுள்ள பிளவை மூடிமறைக்க போடப்பட்ட மூடுதிரைக்கு மத்தியிலும் முன்னெப்பொழுதையும்விட ஏற்பட்டுள்ள பிளவு மிகத்தெளிவாகத் தெரிகிறது.

## டட்லியின் கதை

1964-ம் ஆண்டு டிசம்பரில் சுதந்திரக் கட்சியிலிருந்து ராஜினமாச் செய்து ஒரு வாக்கினல் கூட்டரசாங்கத்தை வீழ்த்திய சி. பி. டி. சில்வாவுக்கு 1965 மார்ச் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து தாம் பிரதமர் பதவியை அளிக்க முன்வந்ததாக தனது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு டட்லி கூறியதன் மூலம்உண்மையில் அப்பதவியை அபகரிக்கத் திட்டம் தீட்டிய ஜே. ஆரின் ஆசைக்கு அடி கொடுத்தார்.

டட்லியின் இக்கூற்றை உண்மையென அத்தாட்சிப் படுத்துவதற்காக சி. பி. டி. சில்வாவும் விசேஷ அழைப்

12-ம் பக்கம் பார்க்க


அல்பேனிய தேசிய தினத்தை முன்னிட்டு

**நவம்பர் 29-ம் திகதி புதனன்று**

**பிற்பகல் 5 மணிக்கு**

**அல்பேனியா பற்றி**

**தோழர் என். சண்முகதாசன்**

123, யூனியன் பிளேஸிலுள்ள

தொழிலாளர் மண்டபத்தில்

பகிரங்க சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி


### அல்பேனிய தேசிய தின விசேஷ மலர்

அல்பேனிய தேசிய தினத்தை முன்னிட்டு அடுத்தவாரம் வெளிவரும் 'தொழிலாளி' அல்பேனிய தேசத்தைப்பற்றிய கட்டுரைகளைக் கொண்ட விசேஷ மலராக வெளிவரும் என்பதை வாசகர்களுக்கும், விற்பனை ஏஜண்டுகளுக்கும் அறியத் தருகிறோம்.

கூடிய பிரதிகள் வேண்டுவோர் உடனடியாக அறிவிக்கவும்.

# நாட்டை நாசம் செய்ய யங்கி படை எடுப்பு

படை எடுப்பு நடக்கவிருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் (உளவறியும்) 'சமாதானப் படை' விரைவில் இலங்கைக்கு வருகிறது.

ஒரு விமானம் நிறைய, 67 பேர் இங்கு வருகின்றனர். பிற்போக்காளர்களினுல் எமது நாட்டில் உருவாக்கப்பட்டு வரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஊடுருவலில் இது ஓர் புதிய கட்டத்தை ஏற்படுத்தும்.

இலங்கைக்கு இந்தவிதமான (உளவறியும்) 'சமாதானப் படை'யை அனுப்ப வாஷிங்டனில் திட்டம் தீட்டப்படுகிறது என முதலில் அரசாங்கத்தை எச்சரித்தவர்கள் நாம் தான்.

அமெரிக்க சி. ஐ. ஏ. (உளவறியும் ஸ்தாபனம்) யின் நடவடிக்கைகளுக்கு போடப்படும் மூடுதிரைதான் இந்த 'சமாதானப் படை' என்ற எமது எச்சரிக்கையின் காரணமாக, அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் இவர்களை வராமல் தடுப்பது என தீர்மானிக்கப்பட்டது.

ஆறு மாதங்களுக்கு முன்பு இது நடைபெற்றது. ஆனல் கால ஓட்டத்தில் வெளிவிவகார அமைச்சிலும் காணி, நீர்பாசன அமைச்சிலும் உள்ள பிற்போக்கு சக்திகள் இச்சமாதானப் படைக்கு பாவாடை விரிக்க சதித் திட்டத்தை உருவாக்கின.

இந்தப் படைக்கு தலைமை தாங்குபவர் 40 வயதைத் தாண்டியுள்ள திருமதி டிலன் என்பவராகும். கடந்தவாரம் கொள்ளுப்பிட்டி காலி வீதியிலுள்ள ஸ்டிவாட் என்ஜினியர்களுக்கு முன்பதாக இப் (கூலி) படையின் காரியாலயம் ஒன்றை திறந்துவைக்கும் முகமாக ஓர் 'விருந்து' நடைபெற்றது.

அரசாங்கத்தின் சார்பில் கலந்துகொண்டவர்களுக்கு தலைமை தாங்கியவர் உள்நாட்டு மந்திரி தஹாநாயக்கா ஆகும்.

கருவாக்காட்டு வாசம் வீசிய அந்த வைபவத்தில் அமெரிக்க தூதுவருடன் மந்திரி தஹா பெரும் உரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

விவசாய வளர்ச்சிக்கு உதவி செய்யப் போகிறுர்கள் என்ற பேரிலேதான் இந்த கேடு கெட்ட கூட்டத்தை எமது நாட்டிலே பிற்போக்குவாதிகள் நடமாடவிடப்போகிறுர்கள். விவசாயம் செய்யும் எமது வாலிபர்கள் மத்தியிலும், மந்திரி தஹாவின் ஆசியுடன் கச்சேரிகளிலும் இப் படையினர் செயலாற்றுவர். எமது விவசாயத்திற்கு ஊக்கமளிப்பதற்காக என்ற பேரில் கச்சேரிகளில் இவர்கள் தற்காலிக கிளாக்மார்களாக கடமையாற்ற திட்டம் போடப்பட்டுள்ளது.

ஆனல் வருகின்ற இந்த யங்கி கூட்டத்தினர் இந்த நாட்டில் தமது உளவறியும் வேலை சரிவராது என்பதை நிச்சயமாக விரைவில் அறிந்து கொண்டு சோர்ந்த முகத்துடன் தமது நாட்டுக்கு விரைவில் திருப்புவர் என்பது நிச்சயம்..

# எம். பி. களுக்கு கார்

வெளிநாட்டு செலவாணியைக் கட்டிக்காக்க வேண்டும் என யு. என். பி. ஒப்பாரி வைப்பது எவ்வளவு போலி என்பது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களின் மனைவிமார்களுக்கும் கார் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளதிலிருந்து அம்பலமாகியுள்ளது. இக்கார்களில் பல வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்பட உள்ளன.

யு. என். பி. செனட்டர் என். எம். அப்புஹாமி (பெரிய வர்த்தக முதலாளி) யு. என். பி. பாராளுமன்ற உறுப்பினர் டொனல்ட் ரணவீர (தோட்ட சொந்தக்காரர்) ஆர். விஜயசிரி ஆகியோருக்கு பென்ஸ் லொறி இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மொரட்டுவ தொகுதி யு. என். பி. பாராளுமன்ற பிரதிநிதி ரஸ்கின் பர்ணுந்துவுக்கு இரண்டு ஜீப்புக்கும் ஜோர்ஜ் ராஜபக்ஷ, எம். எம். முஸ்தபா, சி. என். மத்தியூ, டி. பி. வலக்கதர, நயனு மரைக்கார் ஆகியோருக்கும் ஜீப் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ரொணி டி மெல், ஈ. எல். சேனநாயக்கா ஆகியோருக்கு லாண்ட் றேவர் இறக்குமதி செய்யவும், தேசியமய அமைச்சர் வீ. ஏ. சுகததாசவுக்கும், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கும் மொரிஸ் வானுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரிபுவாத தலைவரின் மனைவி டொரின் விக்கிரமசிங்கவிற்கும் திருமதி ஸ்ரீ மாவோவுக்கும் வாகனங்கள் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# யூ.என்.பி. யிடம் காணி பெற்ற விவசாயி யார்?

யூ. என். பி. ஆட்சியிடம் யார் யாருக்கு நிலம் வழங்கப்பட்டது என்ற கேள்வியை கடந்த வாரம் பாராளுமன்றத்தில் அனுராதபுர தொகுதி அங்கத்தவர் கே. பி. ரட்னுயக்கா கிளப்பினுர். அதற்கு அளிக்கப்பட்ட பதில் யூ என். பி. ஆட்சி யாருக்கு நிலம் கொடுத்து உதவி செய்கிறது என்பதை அம்பலப்படுத்தியுள்ளது.

நிலம் பெற்றவர்களின் பட்டியல் இதோ:- கல்வி மந்திரி (ரி) ஐ. எம். ஆர். ஏ. ஈரிய கொல்லை 172 ஏக்கர். உதவி மந்திரி விஜயபால மெண்டிஸ். சின் மனைவி திருமதி நந்தா மெண்டிஸ் 1000 ஏக்கர் மொரட்டுவ பாராளுமன்ற உறுப்பினர் ரஸ்கின் பர்ணுந்து 3000 ஏக்கர். கண்டி. பா. உ. ஈ. எல். சேனநாயக்கா 700 ஏக்கர். உதவி காணி மந்திரி கப்டின் செனிவிரத்தினவின் மனைவி 100 ஏக்கர். உதவி நிதி மந்திரி என். விமலசேன 100 ஏக்கர். உதவி கைத்தொழில் மந்திரி 150 ஏக்கர். ஆர். வி. சுபசிங்க (ஆர். ஜி. சேனநாயக்காவின் உறவினர்) 500 ஏக்கர். யு. என். பி. செனட்டர் என். எம். அப்புகாமி 200 ஏக்கர். எஸ். பி. லெனுவ (சிபிடி சில்வாவின் கட்சி) 200 ஏக்கர் கே. டபிள்யு. தேவநாயகமும் (யு. என். பி. பாராளுமன்ற உறுப்பினர்) மற்றும் இருவரும் 100 ஏக்கர். யூ. என். பி. பாராளுமன்ற உறுப்பினர் ஏ. சின்னலெப்பை 100 ஏக்கர் தமிழரசு எம். பி. ராசதுரை 25 ஏக்கர் யு. என். பி. செனட்டர் வை. ஆர். பியசேன 200 ஏக்கர் ஜி. ஜி. பொன்னம்பலம் (தமிழ் காங்கிரஸ்) 200 ஏக்கர் டி. எஸ். திலகரத்தின பண்டா (யு. என். பி.) 100 ஏக்கர் பி. ஜி. முத்து பண்டா (யு. என். பி.) 200 ஏக்கர் பி. வி. ஏ. வீரக்கோண் (யு. என். பி.) 100 ஏக்கர் டி. என். ஜயசிங்க (யு. என். பி.) 150 ஏக்கர் தர்சேன பண்டா (யு. என். பி.) 150 ஏக்கர்.

கடந்த தேர்தலில் தோல்வியுற்ற யு. என். பி. காரர்களான டொன் டேவிட் 50 ஏக்கரும் விஜயபாகு விஜயசிங்க 200 ஏக்கரும் பெற்றுள்ளனர். அல்பிரட் டி சொய்சா 150 ஏக்கரும் கே. எம். டி. ஜயனத்தி 200 ஏக்கரும் அட்பிரல் றேய்ஸ் டி மெல் 100 ஏக்கரும் மாலேவன ஞானேசார தேரோ 100 ஏக்கரும் பெற்றுள்ளனர்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த என். ஏ. சூரியாராச்சி 100 ஏக்கரும், டி. எஸ். குணசேகர 100 ஏக்களும் பெற்றுள்ளனர்.

நாட்டிலே லட்சக்கணக்கான ஏழை விவசாயிகள் நிலமற்றவர்களாக பரிதவிக்கும் பொழுது யு. என். பி. ஆட்சி தனது பந்தக்காரர்களுக்கும், கள்ளச்சாரயம் வடிப்போருக்கும், காடையர்களுக்கும் கள்ளர்களுக்கும் நிலப் கொடுக்கிறது. இதுதான் யு. என். பி. ஆட்சியிலே நாடு படும்பாடு.

1935 காணிக் கமிஷனுல் எந்த தனிப்பட்ட முதலாளிகளுக்கும் நிலம் வழங்கப்படக் கூடாது என செய்த சிபார்ச்சை இவ்வளவு காலமும் இருந்த அரசாங்கங்கள் பின்பற்றி வந்தன. இன்று யு. என். பி. அதையும் காற்றிலே பறக்க விட்டுள்ளது.

## அல்பேனியாவுக்கு எமது தோழர்கள்

அல்பேனிய தேசிய தினத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அங்கத்தவர்களான தோழர்கள் வீ. ஏ. கந்தசாமியும் எம். சி. எம். சாபியும் கடந்த வாரம் அல்பேனியாவுக்கும் பயணமாயினர்.

## உருத்திரபுரம் பலநோக்கு ஐக்கிய சங்கத்தின் ஊழல்

உருத்திரபுரம் பலநோக்கு "ஐக்கிய சங்கம் அண்மையில், 17-12-65—21-11-66 வரையுமுள்ள, எண் பார்வை அறிக்கையும் வருடாந்தப் பொதுக் கூட்ட நிகழ்ச்சி நிரலும்" என்னும் விஷயங்கள் சம்பந்தமாக பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் எண் பார்வையாளர்களின் அறிக்கைகள் இடம் பெற்றுள்ளன. இவ்வறிக்கைகளில் சங்கத்தின் முன்னைய நிர்வாக சபையைச் சேர்ந்த சிலர் செய்துள்ள கணக்குத் தில்லு முல்லுகளைக் குறிப்பிட்டுள்ளனர். இத்தில்லு முல்லுகளின் படி விவசாயிகளுக் கெதிராகப் பல சூழ்ச்சிகளைச் செய்துள்ளது தெரிய வருகின்றது.

அதாவது, சங்கத்தின் முன்னைய நிர்வாக சபையைச் சேர்ந்த ஒரு சிலர், விவசாயிகள் கொடுத்த நெல்லுக்குப் பதிலாகத் தாம் பணம் பெற்றும், பொய்க் கணக்குகள் மூலமும், கள்ளக் கையெழுத்துக்கள் மூலமும் ஆயிரக்கணக்கான பணத்தை கையாடியுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த அறிக்கையை அண்மையில் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் உருத்திரபுரம் கிளை கவனத்தில் எடுத்து ஆராய்ந்து சங்கத்தில் உள்ள ஊழல்களை கண்டு பிடித்துள்ளது. இது சம்பந்தமாக உருத்திரபுரம் விவசாயிகள் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இது மாத்திரமல்ல, உருத்திரபுரத்தில் உள்ள விவசாயிகளுக்கு இன்னும் எத்தனையோ ஏராளமான பிரச்சனைகள் உள்ளன.

ஒரு வருடத்திற்கு முன் உருத்திரபுர விவசாயிகள் சங்கத்துக்கு நெல்லுக் கொடுத்து விட்டு பணம் பெற முடியாமல் அவதிப்பட்டார்கள். எம். பியைப் பிடித்தார்கள், என்ன செய்தும் முடியவில்லை. இறுதியாக தம்முடைய பிரச்சினைகளுக்குத் தாம் போராடுவதே சரி என்ற முடிவுக்கு வந்தார்கள். அதன் பயனுக இலங்கை விவசாயிகளின் ஒரேயொரு போராட்ட ஸ்தாபனமான அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தில் இணைந்து போராட்டம் நடத்தினுர்கள். போராடியதன் மூலமாக அவர்கள் நெல்லுக்கு பணம் பெற முடிந்தது. அன்று தொடக்கம் அவர்கள் தமது போராட்ட ஸ்தாபனமான அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் உருத்திரபுரம் கிளையின் மீது நம்பிக்கை வைத்து வருகிறுர்கள்.

தற்பொழுது கூட சங்க ஊழல்கள் விஷயமாகவும், ஏனைய பிரச்சினைகள் சம்பந்தமாகவும் தமது விவசாயிகள் சங்கம் மூலம்போராடகிளப்பியிருப்பதும் அதற்காகத் தயாராகி வருவதும் மிகவும் சரியான தாகும். தமது பிரச்சினைக்காக, தாமே போராட முன் வந்திருப்பது மிகவும் பொருத்தமான தாகும். இது அவர்களின் முன்னைய அனுபவமும், ஏனைய அடக்கப்பட்ட மக்களின் அனுபவமுமாகும்.

சங்க ஊழல்கள் சம்பந்தமாகவும். ஏனைய பிரச்சினைகள் சம்பந்தமாகவும் உருத்திரபுரம் விவசாயிகள் சங்கம் நடத்தப் போகும் போராட்டங்களுக்காக தமது போராட்ட ஸ்தாபனத்தில் அங்கு வாழக்கூடிய சகல விவசாயிகளையும் அணிதிரட்டி வருகின்றுர்கள். எல்லாரும் ஐக்கியப் பட்டுப்போராடுவதன்மூலமே வெற்றி பெற முடியும்.

## டி. டி. ஏ. வெற்றி

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைந்துள்ள திருகோணமலை டி. டி. ஏ. தொழிலாளர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக கடந்த வாரம் தொழிற் கந்தோரில் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

அதன் பயனுக 9 மாதங்களுக்குரிய ½ மணித்தியால ஓவர்டைம் சம்பளத்தை தொழிலாளர்களுக்கு கொடுக்க டி. டி. ஏ. நிர்வாகம் ஒத்துக்கொண்டுள்ளது. மற்றும் பல கோரிக்கைகளும் வென்றெடுக்கப்பட்டுள்ளன.

எமது சங்கத்தின் சார்பில் தோழர் கே. குலவீரசிங்கம் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார்.

# திருகோணமலையை அமெரிக்காவுக்கு அடகு வைக்க தமிழரசார் கனவு கண்டனர்

**கடந்த 16 ம் திகதி திருகோணமலை மைதானத்தில் நடைபெற்ற பிரமாண்டமான கூட்டமொன்றில் தோழர் என். சண்முகதாசன், திருகோணமலைத் துறைமுக தேசியமயத்தை எதிர்த்ததற்காக தமிழரசுக் கட்சியை வன்மையாகக் கண்டித்தார்,**

இக் கூட்டம் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் திருகோணமலைக் கிளையினுல் ஒழுங்கு செய்யப்பட்டது. திருகோணமலைத் துறைமுகம் தேசிய மயமானதைக் கொண்டாடும் முகமாகவும், சகல தொழிலாளர்களுக்கும் நாளுக்கு ரூ 1/- சம்பள உயர்வு வேண்டும் என்பதை ஆதரித்தும், மகத்தான ஒக்டோபர் புரட்சியின் 50வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும் முகமாகவும் கூட்டப்பட்டது. இதுபோன்ற ஓர் சனக் கூட்டத்தை வரவழைப்பதற்கு, வர்த்தக ஊழியர் சங்கம், வானவிளையாட்டு, சங்கீதம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய வேண்டியிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் கொழும்பிலிருந்து 5 பஸ்களில் ஆட்களைக் கொண்டுவந்து தான் இக்கூட்டத்தை அவர்களால் நடத்த முடிந்தது.

துறைமுகத் தொழிலாளியான தோழர் றஹீம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். எஸ். டி. பண்டாரநாயக்க, எம். பி., ஹிக்கொட தர்மசேன (சி. டி. யூ. எப். உபதலைவர்) சாகுல் ஹமீட் (தலைவர் இலங்கை சோஷலிஸ தொழிலாளர் சங்கம்) மைக்கல், ஜயதிலக, சாத்தப்பன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

### தமிழரசு சுயரூபத்தை காட்டியது

துறைமுகத்தை தேசிய மயமாக்க அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து வெற்றி பெற்றதற்காக தோழர் சண்முகதாசன் திருகோணமலைத் துறைமுகத் தொழிலாளர்களை வாழ்த்தினர். குறிப்பாக திருகோணமலைத் தேயிலை ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டிருந்த, சி. டி. யூ. எப். அங்கத்தவர்களான தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 60 லட்சம் ரூபா பெறுமதியான தேயிலையை ஏற்றுமதி செய்ய மறுத்ததன் மூலம் அரசாங்கம் தொழிலாளர்களுக்கு விட்டுக்கொடுத்து துறைமுகத்தை தேசிய மயமாக்க வேண்டியேற்பட்டது! என்றும் அதற்காக அத் தொழிலாளர்களைப் பாராட்டுவதாகவும் கூறினர்.

திருகோணமலை தேசிய மயமாக்குவதை எதிர்த்ததன் மூலம் தமிழரசுக் கட்சி தனது சுயரூபத்தை மறுபடியும் வெளிக் காட்டியுள்ளது என்று அவர் கூறினர். ஆனல் துறைமுகத்தை தேசிய மயமாக்க முன்வந்ததால் யு. என். பி. முற்போக்கானது என்று அர்த்தமில்லை. யூ. என். பி. ஏகாதிபத்திய சார்பு முதலாளி வர்க்கத்தின் கட்சி. எமது ஏற்றுமதி வர்த்தகம் சுமுகமாக நடக்க வேண்டும் என்பது அதன் விருப்பம். குறிப்பாக பெரிதும் வருமானத்தைத் தருகின்ற தேயிலை ஏற்றுமதியில் யு. என். பி.க்கு அக்கறை அதி



கம். கடந்த காலங்களில் திருகோணமலை தனியார் துறையினரின் துறைமுக நிர்வாகம் சீரழிந்து விட்டது. அதனல் கடமைகளை அவர்களால் செய்ய முடியவில்லை. தனியார் துறையினரின் நிர்வாகம், முதலாளி வர்க்கத்திற்கும் சாதகமாய் இருக்க வில்லை. தொழிலாளி வர்க்கத்திற்கும் சாதகமாய் இருக்க வில்லை. வேலைகளைத் துரிதப்படுத்துவதற்காக, அவர்களை விலக்கிவிட்டு, துறைமுகத்தை தேசிய மயமாக்க வேண்டியதாயிற்று.

ஆனல், நம்பத் தகுந்த விபரங்களின் படி தமிழரசுக் கட்சி இதனை வன்மையாக எதிர்த்ததாகவும், அரசாங்கத்திலிருந்து விலகும் தீர்மானமொன்றையும் விவாதித்தது என்றும் தெரிகிறது. பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட முற்போக்கான நடவடிக்கைகளை தமிழரசுக் கட்சி எதிர்த்தது இதுவல்ல முதல் தடவை. காலம் சென்ற பண்டாரநாயக்க, திருகோணமலையில் பிரித்தானிய தளங்களை அகற்ற முயன்ற போதும் கூட தமிழரசுக் கட்சியினர் எதிர்த்தனர் என்பதை தோழர் சண்முகதாசன் சுட்டிக்காட்டினர். இது பற்றி பிரித்தானிய மகாராணிக்குக் கூட தமிழரசார் தந்தி அடித்தனர்.

அதற்குப்பின் முன்வைக்கப்பட்ட சகல முற்போக்கு நடவடிக்கைகளையும் தமிழரசார் எதிர்த்து வந்தனர். நெற்காணி சட்டம், பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல், எண்ணைக் கம்பெனிகளைத் தேசிய மயமாக்கல், பத்திரிகை ஏக போகத்தை முறியடிக்க கொண்டு வரப்பட்ட பத்திரிகை மசோதா போன்றவற்றை எல்லாம் எதிர்த்தனர் அண்மையில் திருகோணமலை துறைமுக தேசிய மயத்தை எதிர்த்ததில் இருந்து, தமிழரசுக்கட்சி அடிப்படையில் ஓர் பிற்போக்குக் கட்சி என்பதை மேலும் நிரூபித்துள்ளது. இதனுல் தான் 1965ல், சரித்திரத்தின் முன்னேற்றத்தைத் தடை செய்ய யூ. என். பி. யுடன் கூட்டுச் சேர்ந்தது என்பதும் மேலும் நிருபணமாகியது.

ஆனல் யு. என் பி. யுடன் கூட்டுச் சேர்ந்ததால் தமிழரசுக் கட்சிக்கு எதுவித நன்மை

## பிரமாண்டமான சி. டி. யூ. எப். கூட்டத்தில் தோழர் சண்

யும் ஏற்படவில்லை. நிம்மதியும் ஏற்படவில்லை. மாருக தமிழ் மக்கள் மத்தியில் எதிர்ப்பையும் வெறுப்பையும்தான் சம்பாதித்துள்ளது. தமிழரசுக் கட்சியினுலும் யு. என். பி. யினுலும் தமது தேர்தல் வாக்குறுதிகள் எதையுமே நிறைவேற்ற முடியவில்லை. தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமற்போனது மல்லாமல் யு. என். பி. யுடன் சேர்ந்ததால், அரிசி வெட்டுப் போன்ற நடவடிக்கைகளினுல் மக்களின் பொதுவான வெறுப்பையும் சம்பாதித்துக்கொண்டது.

### திட்டமிட்ட நாடகம்

இதன் காரணமாக தமிழரசுக் கட்சி இன்று தமிழ் மக்கள் முன் தலைகாட்ட முடியாதிருக்கின்றது. ஆதலால் மக்களின் கவனத்தை உண்மையான பிரச்சினையில் இருந்து திசை திருப்புவதற்காக இடையிடையே, அரசாங்கத்திலிருந்து விலகப் போகிறோம் என்ற நாடகத்தை நடித்துக் காட்டுகின்றனர் என்று தோழர் சண்முகதாசன் எடுத்துக் கூறினர்.

மேலும் அவர் பேசுகையில் இதுபோன்ற ''நாடகம்'' யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. ஆனல் இந்தமுறை நாடகம் சோக முடிவாக மாறியது. இது வழக்கம்போல் நடத்தும் நாடகம் என்பதை தமிழரசுக் கட்சியின் சாதாரண அங்கத்தவர்கள் தெரிந்திருக்காதது தான் இதற்குக் காரணம். சிலர் இது உண்மையான விஷயம் என்று நினைத்து ஆர்ப்பாட்டம் நடத்தவும் முன்வந்தனர். இதனல் கைகலப்பும் ஏற்பட்டது.

### அரிசி வெட்டை எதிர்க்காதது ஏன்

மக்களின் வயிற்றில் அடித்த, மிகவும் பாரதூரமான அரிசி வெட்டு போன்ற விஷயத்தில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் இருந்து விலகுவதாகப் பயமுறுத்தவில்லை என்பதை எவராலும் கவனிக்காமல் இருக்க முடியாது.

யு. என். பி. க்கு டட்லி—ஜே. ஆர். மோதலுடன் இணையக்கூடிய முறையில் தமிழரசுக் கட்சி தனது நாடகத்தை யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றியது இது அமெரிக்க சார்பான தமிழரசார் டட்லிக்குத் தொல்லை கொடுக்கவும் ஜே. ஆருக்கு உதவியளிக்கவும் திட்டமிட்டு நடத்திய நாடகம் என்பதில் சந்தேகமில்லை. டட்லி-ஜே. ஆர். பிளவு தற்காலிகமாக மூடி மறைக்கப்பட்டுவிட்டதால், யு. என். பி. தமிழரசு மோதலும் மூடி மறைக்கப்படும் என்றுர் தோழர் சண்முகதாசன்

### பிரச்சினை தீர முற்போக்கு ஆட்சி வேண்டும்.

தமிழரசுக் கட்சி, திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கர்களுக்கு இரவல் கொடுத்து தமது சமஷ்டி ஆட்சிக் கனவுக்கு அமெரிக்க ஆதரவை பெறலாமென எப்போதும் கனவுகண்டு வந்துள்ளது. திருகோணமலை தேசியமயமாக்கப்பட்ட தால் இவர்களின் இந்தக் கனவிற்கு அடி விழுந்துவிட்டது. இதனல் தான் இவர்கள் ஆத்திரம் கொண்டு பிதற்றுகின்றனர்.

யூ. என். பி. யினதும் தமிழரசுக் கட்சியினதும் நெருக்கடிகள், இவ்விரு கட்சிகளின் அரசியல் பங்குரோட்டுத் தனத்தையுமே பிரதிபலிக்கின்றன. இவர்களது கொள்கைகள் இலங்கையை மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் ஆழ்த்திவிட்டன. தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஓர் முற்போக்கு ஆட்சியை நிறுவி நாட்டின் பொருளாதார, சமூக அமைப்பில் புரட்சிகர மாற்றம் ஏற்படுத்துவதைத் தவிர, இப் பிரச்சினைக்கு வேறு வகையில் தீர்வு காண முடியாது.

உளுத்துப்போன பாராளுமன்றப் பாதையைப் பின்பற்றுவதன்மூலம் இது சாத்தியமாகாது. புரட்சியின்மூலம் மட்டுமே இது சாத்தியம். அதாவது 1917-ல் ருஷ்ய தொழிலாளர்களும் விவசாயிகளும் பொல்ஷவிக் கட்சியினதும் லெனினினதும் தலைமையில் ஆயுத போராட்டத்தின்மூலம் தான் இதைச் சாதித்தனர். மகத்தான அக்டோபர் புரட்சியில் இருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் இதுவேயாகும்.

தொழிலாளர்கட்கு பல பெரும் பொருளாதாரக் கோரிக்கைகளைவென்றெடுத்த ஒரே ஒரு தொழிற் சங்க மத்தியஸ்தானம் சி. டி. யு. எப்; இன்று சகல தொழிலாளர் கட்கும் நாளுக்கு ஒரு ரூபா சம்பள உயர்வுக்கான போராட்டத்தின் முன்னணியில் நின்று உழைப்பதும் சி. டி. யு. எப். தான் திருகோணமலையிலுள்ள தொழிலாளர்கள் யாவரும் சி. டி. யு. எப் பின் போராட்டத் துவஜத்தின் கீழ் அணிதிரள வேண்டும். குறிப்பாக துறைமுகத் தொழிலாளர்கள் சி. டி. யூ. எப்பின் தலைமையில் தனியொரு சக்திமிக்க சங்கம் அமைத்து தமது கோரிக்கைகளுக்காகப் போராட வேண்டுமென தோழர் சண்முகதாசன் கூறி முடித்தார்.

கூட்டத்திற்கு முன்பதாக சீனக்குடா, அன்புவழிபுரம், அபயபுர, மடத்தடிசந்தி, உப்புவெளி, ஜமாலியா வீதி ஆகிய இடங்களில் தொழிலாளர்களும் பொது மக்களும் கூடி நின்று தோழர் சண்முகதாசனையும், எஸ். டி. பண்டாரநாயக்காவையும் மலர் மாலையணிவித்து வரவேற்றனர்.

வாசியுங்கள்
RED FLAG
ஆங்கிலவார ஏடு
விலை சதம் 15
விபரங்களுக்கு:-
121, யூனியன் பிளேஸ்
கொழும்பு-2

நம்மைச் சுற்றி — நவம்

# கூ.மொ.வி.யை குழிதோண்டி புதைக்க முயற்சி

சென்ற வாரம் இரண்டு அறிக்கைகள் அரசாங்கத்திற்கு (அரசாங்கத்தால் வேண்டப்படாத) சமர்ப்பிக்கப்பட்டன. எடுத்ததற்கெல்லாம் விசாரணைக் கமிஷன் நியமித்துப் பம்மாத்துப் பண்ணுவது பாராளுமன்ற ஆட்சித் துறையிலே சர்வ சாதாரணமான நடைமுறை. யாரோ ஒரு குயிக்தியின் கணிப்புப்படி கடந்த இருபதாண்டு காலத்தில் முன்னூறுக்கு மேற்பட்ட அறிக்கைகள் அரசாங்கங்களால் பெறப்பட்டுள்ளனவாம், ஆனால் இலங்கை மக்களின் வாழ்க்கையில்தான் முன்னேற்றம் எதுவும் காணவில்லை. சென்ற வாரம் வெளியிடப்பட்ட அறிக்கைகளும் வழக்கம் போல ''கண் துடைப்பு'' வேலைதான். ஆனால் நாடு போகும் போக்குழு சில நடவடிக்கைகளைச் சிபார்சு செய்துள்ளது. அவற்றுள் முக்கியமானவை இரண்டு.

(1) கூ, மொ. வி. நிறுவனத்தின் ஒரு பிரிவாக இப் இப்பொழுதுள்ள ஏற்றுமதி பகுதியை மூடுதல். (2) பாவனைப் பொருட்களின் விற்பனை சம்பந்தமான ஆராய்ச்சி செய்தல். இவ் விரண்டும் ஆழமான பொருள் பொதிந்தவை.

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகமானது ஏறத்தாழ முழுவதும் அந்நியர் ஆதிக்கத்தில் இருப்பது பொதுவாக யாவரும் அறிந்ததே. தேயிலை போன்ற பொருளில் நூற்றுக்கு நூறு வீதம் அந்நியரே எமது பண்டத்தின் தலைவிதியை நிர்ணயிப்பவராயுள்ளனர். இந் நிலையிலேயே எம்.

இரண்டாவது சிபாரிசு, மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது பயனுள்ளது போலத் தோன்றக் கூடும். ஆராய்ச்சி யல்லவா? (ஆனால் தமிழாராய்ச்சி என்ற பெயரில் எவ்வளவு - தகிடு தத்தங்கள் நடக்கின்றன) பாவனைப் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சி என்பது முதலாளித்துவ வியாபாரத்தின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாகும். லிவர் பிறதர்ஸ் கம்பெனியின் விற்பனைப் பரீட்சார்த்திகள் (பெண்கள்) போகாத இடம் எங்கு இருக்கிறது! சவுக்காரம் பச்சையாக இருப்பதா, நீலமாயிருப்பதா உங்களுக்குப் பிடிக்கும் என்று கேட்பது முதல் சிக்னல் பற்பசை மற்றவற்றை விட ஏன் சிறந்தது என்று விளங்கப்படுத்துவது வரை தனியார் நிறுவனங்கள்கத் திசை திருப்பிக் குழி தோண்டிப்புதைக்கும் முயற்சியாகும். நல்ல இலாபம் சம்பாதிப்பதே கூ. மொ. வி. இலட்சியமாக மாறினால் அதற்கும் பிற தனியார் நிறுவனங்களுக்கும் என்ன வித்தியாசம்? இது தோலிருக்கச் சுளை பிடுங்கும் தந்திரமாகும். முழு பெரு வர்த்தகங்களையும் தேசிய மயமாக்கும் காலத்திலேயே இத்தகைய நச்சுக் கொடிகளைப் பூண்டோடு பிடுங்கி எறிய முடியும்.

★

## சர்வதேச வட்டிக் கடையும் இலங்கையும்

நான் மேலே குறிப்பிட்ட இரண்டாவது அறிக்கை உலக

இத்தகைய, உலகச் சுரண்டல் வங்கியின் குழு யூதர் (யூ. என். பி.—தமிழரசு) ஆட்சிக்கு ஏற்ற ''ஆலோசனை'' கூறியுள்ளது. இன்று இலங்கைப் பொருளாதாரம் ஸ்தம்பித்து—வளர்ச்சியடையாமல்—நிற்பதற்கு காரணம் பொதுத் துறைக்குச் செலுத்தப்படும் அளவுக்கு மீறிய சிரத்தையே என்றும், அதைக் கைவிட்டுத் தனியார் நிறுவனங்களுக்கு ஊக்கமும், ஆதரவும் அளித்தால் நாட்டின் பொருளாதாரம் துரிதமாக முன்னேறும் என்றும் பொருளாதார சித்தாந்தம் போதித்துள்ளது, ஏகாதிபத்தியவாதிகள் எள் என்றால் எண்ணெய் என்று நிற்கும் எமது முதலாளித்துவப் பாதந்தாங்கிகளுக்கு ''உலக வங்கி'' நிபுணர்களின் ஆலோசனை போதுமே!

இந்த அறிக்கையில் மற்றொரு விசேஷ அம்சம் என்னவென்றால், அது தத்துவார்த்த ரீதியாகப் பொதுத்துறை முயற்சிகளைத் தாக்கித் தனியார் துறையின் சிறப்பு பற்றிப் பேசுவதாகும். அரசாங்கத்துறை அலுவல்களில் எவருக்குமே அக்கறையில்லை என்றும், விசயங்கள் கால தாமதமாகும் என்றும், ஊக்கமுடைமை இல்லாது போகும் என்றும், போதிய மூலதனம் தேடுவது கடினம் என்றும் கூறும் அறிக்கை தனியார் கைத்தொழில், வர்த்தக முயற்சிகளை மேற்கொண்டால் வெளிநாட்டு முதலாளிமாருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்

# நாட்டை முற்றுக அடகு வைக்க ஆலோசனை

கைத் துலக்கமாக எடுத்துக் காட்ட வல்லனவாக அமைந்துள்ளன.

முதலாவது, கூட்டுறவு மொத்த விற்பனை இலாகா சம்பந்தமானது. யூ. என். பி. பதவிக்கு வந்ததும் விழுந்தடித்துக்கொண்டு அரசியல் பகைமை காரணமாக நியமித்த விசாரணைக் கமிஷன்களில் முதலாவது கூ. மொ. வி. இ. சம்பந்தமானது. அக்குழுவின் அறிக்கை பகுதி பகுதியாக வெளிவந்தது. இப்பொழுது இறுதிப் பகுதி (மூன்றும் தொகுதி) வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையை வெளியிட வேண்டாமென்று மந்திரி சி. பி. டி. சில்வா டட்லியை ரொம்பவும் வற்புறுத்தியதாகவும், சி. பி. டி யின் நெருங்கிய உறவினர் ஒருவர் அவ்வறிக்கையில் பாதகமாகத் தாக்கப்பட்டிருப்பதாவும், இது சம்பந்தமாக மந்திரிக்கு மனச் கசப்பு ஏற்பட்டிருப்பதாயும் சொல்லப்படுகிறது. ஆனால் நாம் கவனிக்க வேண்டியது இன்னொரு விஷயம். கூ. மொ. வி. நிறுவனத்தின் நிர்வாகம், எதிர்காலம் முதலியன குறித்து குழு செய்துள்ள சிபாரிசுகள் முதலாளித்துவத்தின் அச்சு மாறாமல் அமைந்துள்ளன. பால் மா தட்டுப்பாடு, துணி பற்றாக் குறை முதலியன ஏற்படும்போது கூ. மொ. வி: நிறுவனத்தை நாடும் யூ. என். பி. தனியார் துறையை முழு மூச்சாக ஆதரிப்பதற்கு ஏற்ற வகையில்

ஈ. பி. சுதந்திரக் கட்சி அரசாங்கங்கள் பொதுத் துறையில் ஓரளவு ஏற்றுமதி வர்த்தகம் இருக்கட்டும் என்ற நோக்குடன் கூ. மொ. வி. இலாகா மூலமாக சிற்சில பொருட்களை ஏற்றுமதி செய்ய வழி கண்டது. பயந்து பயந்து அரை குறையாக இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் ஓரளவுக்கு விரும்பத்தக்க முயற்சியே யாகும். இப்பொழுது குழு இது மூடப்பட வேண்டும் என்று புத்திமதி கூறுகிறது. எமது நாட்டை முற்றாக அடகு வைப்பதற்கு இதைவிட வேறு நல்ல வழி என்ன வேண்டும். மத்திய கிழக்கு வர்த்தகம் கூ. மொ. வி. இலாகா மூலம் நடைபெற்றது. தனியார் துறையை விடச் சில அரபு நாடுகள் பொதுத்துறை நிறுவனத்தை விரும்பின. பண்டமாற்றுக்கும் உதவியாயிருந்தது. இவை யாவற்றையும் மறந்து, அப் பகுதியை மூடி விடுவதென்பது அந்நிய—விதேச வர்த்தகரின் கையோங்குவதையே தெள்ளத் தெளிவாக்குகிறது.

முந்திய அரசாங்கத்தில் கூ. மொ. வி. இலாகா திறம்பட நடந்தது என்றோ அது சோஷலிஸ முறையில் நடத்தப்பட்டது என்றோ நாம் கருதவேண்டியதில்லை. ஆனால் தனி நபர்களால் ஒரு நிறுவனம் மாசு படுத்தப்படலாம். ஆனால் கூ. மொ. வி. இலாகா போன்றது முன்னேறிச் செல்லக் கூடிய பொதுத்துறை நிறுவனமாகும். அதன் வீழ்ச்சி தனிப்பட்ட முதலாளிகளின் உயர்ச்சியாகத்தான் இருக்க முடியும்.

தமது உற்பத்திப் பொருட்களைப் பாவனையாளர்களுக்குச் சுமத்திவிட எத்தனையோ நுணுக்கமான பிரசார, விளம்பர தந்திரங்களையும் யுக்திகளையும் கையாளுகின்றன; பெருமளவு பணமும் செலழிக்கின்றன: இருல் போட்டுச் சுருப் பிடிக்கின்றன. இந்தப் போட்டா போட்டி விவகாரத்தைத்தான் 'சந்தை ஆராய்ச்சி' (market research) என்று கூறுவார்கள். கொள்ளை லாபம் சம்பாதிக்கும் கொம்பனிகளுக்கு இது கட்டும், பொருந்துகிறது. கூ. மொ. வி. மலிவான, நல்ல பொருள்களை மக்களுக்கு விற்கும் நோக்கத்துடன நிறுவப்பட்டது. நஷ்டப்படாது, பெரும் லாபமும் சம்பாதிக்காது சமூகப் பணியாற்றுவதே அதன் இலட்சியமாயிருத்தல் வேண்டும். இலாப நோக்கு அரசாங்கங்களையும் மக்களையும் ஒருங்கே நசமாக்குவதாகும். சோவியத் யூனியனில் (வெட்கமின்றி லெனின் புகழ் பேசும் துரோகிகள் நாட்டில்) இலாப நோக்கு என்பதனைப் பொதுத் துறையில் புகுத்தியது, முதலாளித்துவ ஊடுருவலின் மகத்தான வெற்றியாகும். சோவியத் நாட்டுப் பெண்களுக்கு வேண்டிய அழகு சாதனைப் பொருட்கள் பற்றிய ''சந்தையாராய்ச்சியின் விளைவாகவே பிரான்சிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும் அழகு சாதனைப் பொருட்கள் இப்பொழுது பெருமளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன; மேல் நாட்டு உல்லாசப் பிராணிகள் அவற்றை கள்ள மார்க்கட்டில் விற்றுப் பணம் சேர்க்க முடிகிறது.

இத்தகைய பயங்கரமான இலாப நோக்கையே கூ. மு. வி. இலாகா வழுவாது கடைப்பிடித்தல் வேண்டுமென்பது சிபாரிசின் நோக்கம். இது ஏற்கனவே சீரழிந்துள்ள நிறுவனத்தை முற்று

வங்கியின் விசாரணைக் குழு ஒன்று எமது நாட்டின் பொருளாதாரம் என்ன நிலையிலிருக்கிறது என்பதை மதிப்பிட்டுத் தனது சிபாரிசுகளை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் ஆறரைக் கோடி ரூபாய் நிதி கடன் வழங்க ஏற்பாடு செய்வதற்காக இங்கு வந்தது. வந்த கருமத்தை முடித்துக்கொண்டு அறிக்கை ஒன்றை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது. ஒரு நாட்டிற்கு உலக வங்கி சிபாரிசுகள் செய்திருக்கிறதென்றால் கண்ணை மூடிக்கொண்டு அவை என்னவாக இருக்கும் என்று செல்லி விடலாம். எந்த ஒரு நாடும் (அமெரிக்கா தவிர) சுய தேவையைப் பூர்த்தி

## விதேசிய வர்த்தகர் கை ஓங்குகிறது

செய்துகொள்ள முடியாது என்பது உலக வங்கியின் அடிப்படைத் தத்துவம். அமெரிக்கப் பெரு வங்கிகள் சேர்ந்து அமைத்துள்ள சம்மேளனமே உலக வங்கி என்ற பெயரில் சர்வதேச வட்டிக் கடையாக விளங்குகிறது. இரு வாரங்களுக்கு முன்னர்தான் ஐக்கிய அரபுக்குடியரசு தனது நாணய மதிப்பைக் குறைக்க வேண்டும் என்று உலக வங்கி ஆலோசனை கூறியது. உலக வங்கியின் ''ஆலோசனை'' யின் பிரகாரமே இரண்டாண்டுகளுக் முன்னர் இந்தியா தனது நாணயத்தின் மதிப்பைக் குறைத்தது. உலக நாணயங்களின் மதிப்புக் குறைந்தால் அமெரிக்க டாலரின் மதிப்பு நல்ல நிலையிலிருக்கும்.

என்றும் புத்தி கூறுகிறது. சுருங்கச் சொன்னல், அமெரிக்காவில் தனியார் துறையே ''சிறப்பாக'' இருப்பதால், உதவி வேண்டுவோர் தாமும் அமெரிக்காவிற்கு ஏற்ற முறையில் தம்மை ஆக்கிக் கொள்ளவேண்டும்.

இதற்கு முன்னர் பல தடவைகள் உலக வங்கி இலங்கைக்கு ஆலோசனை கூறியபோதும் இவ்வளவு அப்பட்டமாக-ஒழிவு மறைவின்றி—தனியார் துறையின் மகத்துவம் பேசியது கிடையாது. 1952-ம் ஆண்டில் யூ. என். பி. பதவியிலிருந்த போது ஆங்கில தாசப் போக்கிலிருந்து, அமெரிக்க தாசப் போக்கிற்கு மாறிக்

11-ம் பக்கம் பார்க்க

# மா சே-துங் எமக்கு கற்பித்துள்ள போதனைகள்

**ஒக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் ஞாபகார்த்தமாக சீனத்து ''மக்கள் தினசரி'' ''செங்கொடி'' சஞ்சிகை, ''விடுதலைச் சேனை தினசரி'' ஆகியவற்றின் ஆசிரியர் குழுக்களால் எழுதப்பட்ட கட்டுரை 'ஒக்டோபர் சோஷலிஸப் புரட்சியினுல் திறந்துவிட பட்ட பாதையில் முன்னேறுவீர்'' என்ற தலைப்பில் சென்ற வாரம் வெளிவந்தது. அதன் தொடர்ச்சியை இங்கு தந்துள்ளோம்.**

**ஆ-ர்**

சர்வதேச கம்யூனிஸ இயக்கத்திற்கு தோழர் மா சே-துங்கின் மிகப் பெரும் சேவை, சீனுவின் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தினதும், ஒக்டோபர் புரட்சிக்குப் பிறகு உலகில் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தினதும் சரித்திர ரீதியான அனுபவத்தை அவர் ஒழுங்கு முறையாகத் தொகுத்துரைத்ததே யாகும். அவர் ஆக்கமான அனுபவத்தை மட்டுமன்றி ஆக்கமற்ற அனுபவத்தையும் - குறிப்பாக சோவியத் யூனியனில் சகல துறைகளிலும் முதலாளித்துவம் திரும்பப் புகுவதன் பாரதூரமான படிப்பினைகளையும்—தொகுத்துள்ளார். அத்துடன் அவர், எமது காலத்திய மிக முக்கியமான பிரச்சினையை — தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதும் முதலாளித்துவம் திரும்பப் புகுவதைத் தடுப்பதுமான பிரச்சினையை—அனைத்துமடங்கவும் முற்றுகத் தீர்த்துள்ளார். இது தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிஸ - லெனினிஸ தத்துவத்தின் ஒரு மாபெரும் சகாப்தத்திற்குச் சாதகமான அபிவிருத்தியாகும்.

## மார்க்ஸின் பிரபலமான தத்துவம்

தொழிலாளிவர்க்க சர்வாதிகாரத்துவம் மார்க்ஸாலும், எங்கெல்ஸாலும் நிலைநாட்டப்பட்டது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முதலாவது வீரமிக்க முயற்சியை பாரிஸ் தொழிலாளி வர்க்கம் செய்தது. பாரிஸ் கம்யூன் தோல்வியுற்றது. ஆனுல், மார்க்ஸ் கூறியவாறு ''கம்யூன் கோட்பாடுகள் நித்தியமானவை; அழிக்க முடியாதவை''

''கோதாதிட்டத்தின் விமர்சனம்'' என்ற தனது நூலில் மாாக்ஸ், ''முதலாளித்துவ, கம்யூனிஸ சமுதாயங்களுக்கிடையில், ஒன்று, மற்றதாகப் புரட்சிகரமாக மாற்றப்படும் காலகட்டம் உள்ளது. இதனுடன் இணைவான, அரசு தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரமாகவேயன்றி வேறு எதுவாகவும் இருக்க முடியாத ஓர் அரசியல் மாற்றக் காலகட்டமும் உள்ளது'' என்ற தனது புரட்சிகர தத்துவம் முழுமையையும் தொகுத்துரைக்கும் பிரபலமான தத்துவத்தை முன்வைத்தார்.

## லெனின் சுட்டிக்காட்டிய உண்மை

லெனின், இரண்டாவது சர்வதேசியத்தின் திரிபுவாதத்திற்கு எதிரான தனது போராட்டத்தில் தொழிலாளி வர்க்க புரட்சியையும், தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பற்றிய மார்க்சிஸ தத்துவத்தை ஏற்று, பாதுகாத்து, அபிவிருத்தி செய்து, ஏகாதிபத்திய சகாப்தத்தில் தொழிலாளி வர்க்கப் புரட்சியின் அடுக்கான பல பிரச்சினைகளைத் தீர்த்து, ஒரு நாட்டில் சோஷலிஸம் வெற்றியீட்டுவதன் சாத்தியத்தைப் பற்றிய பிரச்சினையையும் தீர்த்து, அவ்வாருக மார்க்சிஸத்தை ஒரு புதிய கட்டத்திற்கு — லெனினிஸ கட்டத்திற்கு — அபிவிருத்தி செய்தார்.



ஒக்டோபர் புரட்சியின் பின்னர் லெனின், பல சந்தர்ப்பங்களில், தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் கூர்மையான, சிக்கலான, வர்க்கப் போராட்டங்களும் முதலாளித்துவம் திரும்பப் புகும்சாத்சாத்தியமும் இன்னும் உள்ளன எனச்சுட்டிக் காட்டினுர்.

முதலாளித்துவஆட்சி வீழ்த்தப்பட்ட பின்னர்-முதலாளித்துவ அரசு அழிக்கப்பட்ட பின்னர்-தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்ட பின்னர்............ வர்க்கப் போராட்டம் (பழைய சோஷலிஸத்தினதும், பழைய சோஷல் ஜனநாயகத்தினதும் சாதாரண பிரதிநிதிகள்கற்பனை செய்வதுபோல்)மறைந்து விடுவதில்லை. மாருக வெறுமனே தன் வடிவங்களை மாற்றிக் கொள்கிறது; பல வகைகளில் இன்னும் உக்கிரமானதாயும் ஆகிறது'' ''முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்திற்கான மாறுதல் ஒரு முழு வரலாற்று சகாப்தத்தை எடுக்கிறது. இந்தச் சகாப்தம் முற்றுப் பெறும் வரை சுரண்டல் காரர்கள் தவிர்க்க முடியாதபடி மீண்டும் ஆதிக்கம் பெறும் நம்பிக்கையைப் பாராட்டி வருகின்றனர். இந்த நம்பிக்கை மீண்டும் ஆதிக்கம் பெறும் முயற்சிகளாகவும் மாறுகிறது'' என்ருர்.

## தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அவசியம்

தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ், வீழ்த்தப்பட்ட முதலாளித்துவ வர்க்கம், ஏன் இன்னும் மிகுந்த பலமுள்ளதாகவும், எதிர்த்து நிற்கவும், மீண்டும் அதிகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளவும் கூடிய நிலையிலும் இருக்கிறது என்பதுபற்றி, லெனின் ஆழ்ந்து ஊடுருவும் ஆராய்வொன்றை செய்து, தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டிய-பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கினுர்.

''அவர் கூறினுர்: தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது தன்னைவிட அதிகம் பலம் வாய்ந்ததான ஒரு விரோதிக்கு, தான் வீழ்த்தப்படுவதால் (தனி ஒரு நாட்டிலாயினும் சரி) தன் எதிர்ப்பை பன் மடங்கு அதிகரிப்பதும், தன் வலிமையைச் சர்வதேச மூலதனத்தின் பலத்திலும்—தன் சர்வதேசத் தொடர்புகளில் மட்டுமல்லாமல் பழக்கத்தின் வலுவிலும்—துரத்திர்ஷ்டவசமாக உலகில் இன்னும் பரவலாக உள்ளதும், தொடர்ச்சியாயும் நாளுக்குநாள் பொழுதுக்குப் பொழுதுதன்னியல்பாயும் பெரும் ரீதியிலும் முதலாளித்துவத்தையும் முதலாளி வர்க்கத்தையும் உற்பவிப்பதுமான சிறியரீதியிலான உற்பத்தியின் பலத்திலும் கொ-டுள்ளதுயான முதலாளிவர்க்கத்திற்கு எதிராகப் புதிய வர்க்கம் நடாத்தும் மிக உறுதியானதும் மிகத் தாட்சண்யமற்றதுமான யுத்தமே- இக் காரணங்கள்யாவும் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தை அவசியமாக்கின்றன''

## முக்கியத்துவம் வாய்ந்தவை

தத்துவார்த்தத் துறையிலான வர்க்கப் போராட்டத்தின் பாரதூரமான தன்மையையும் லெனின்கவனித்தார். அவர் தெட்டத் தெளிவாகச் சுட்டிக் காட்டினுர்.

''எமது பணி — முதலாளிகளின் எல்லா எதிர்ப்பையும், இராணுவ, அரசியல் எதிர்ப்பை மட்டுமன்றி, மிக ஆழமும் மிக சக்தியும் வாய்ந்ததான தத்துவார்த்த ரீதியான எதிர்ப்பையும் தோற்கடிப்பது''

லெனினினுடைய இந்த மேதாவிலாசமிக்க கருத்துக்களும், விஞ்ஞான ரீதியான பெரும் தீர்க்க தரிசனங்களும் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிஸ தத்துவத்தைப் பிரமாண்டமான அளவு அபிவிருத்தி செய்துள்ளவையும் இன்று ஒக்டோபர் புரட்சியின்பாதையோடு ஒட்டி நிற்கும் மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகள் எல்லோருக்கும் பிரமாண்டமான நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்தவையுமாகும்.

நவீன திரிபுவாதிகளான குருஷ்சோவ், பிரஷ்னெவ், கொஸிஜின் — கூட்டத்தினர் இந்தக் கருத்துக்களுக்கு முற்றுகத் துரோகம் செய்துவிட்டனர்.

நவீன திரிபுவாதிகளுக்கு எதிராகப் போரிடுகையிலும், தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தில் விடாது உறுதியுடன் இருப்பதன் அவசியத்தை விளக்குகையிலும் தோழர் மா சே-துங் லெனினின் இந்தக் கூற்றுக்களை மறவாதிருக்கும்படி தவருது எமக்கும் எப்போதும் கற்பித்து வந்துள்ளார்.

## மிக முக்கியமான ஒரு மைல்கல்

தோழர் மா சே-துங் மார்க்சிஸ-லெனினிஸத்தை முழுமையாக ஏற்று, பாதுகாத்து அபிவிருத்தி செய்தும், தொழிலாளிவர்க்கசர்வாதிகாரத்தின் கீழ் புரட்சி தொடர்வதென்ற பெரும் தத்துவத்தை ஆக்கபூர்வமாக முன்வைத்தும், மனிதகுலத்தின் வரலாற்றில் முதலாவதான மாபெரும் தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் உன்னத நடைமுறையைத் தானே நேரில் தொடக்கி வைத்தும், அதற்குத் தலைமை தாங்கியும் உள்ளார். இது, மார்க்ஸிஸம் முற்றுகப் புதிய ஒரு கட்டத்திற்கு-மா சே-துங் சிந்தனையாகிய கட்டத்திற்கு - அபிவிருத்தியடைந்துள்ளதெனக் காண்பிக்கும் மிகமிக முக்கியமான ஒரு மைல் கல்லாகும்

## முரண்பாடுபற்றி

தொழிலாளிவர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் புரட்சி தொடர்வது பற்றிய தோழர் மா சே-துங்கினுடைய தத்துவத்தின் சாராம்சங்கள் பின் வருமாறு:

1. சோஷலிஸ சமுதாயத்தின் ஆராய்விற்கு எதிர்மறைகளின் ஒற்றுமை என்ற மார்க்சிஸ — லெனினிஸ நியதியைப் பிரயோகிப்பது அவசியம். தோழர் மா சே-துங் சுட்டிக் காட்டுகிருர்: ''எதிர் மறைகளின் ஒற்றுமை நியதியே பிரபஞ்சத்தின் அடிப்படைநியதி'' ''முரண்பாடுகள் எங்கும் உள்ளன'' ''ஒரு பொருளின் உள்ளே இருக்கும் முரண்பாட்டுத் தன்மையே அதன் அபிவிருத்திக்கு அடிப்படைக்காரணம்'' சோஷலிஸ சமுதாயத்தில் ''இருவகையான சமுக முரண்பாடுகள் எமக்கும் எதிரிக்கும் இடையிலானவையும், மக்கள் மத்தியிலே உள்ளவையும்''—இருக்கின்றன. ''எமக்கும் எதிரிக்கும் இடையிலான முரண்பாடுகள் விரோதப் பாங்கான முரண்பாடுகள். மக்களின் அணிகளுக்குள் — உழைக்கும் மக்கள் மத்தியில் — உள்ள முரண்பாடுகள் விரோதப்பாங்கற்றவை'' தோழர் மா சே-துங் எமக்குக் கூறுகின்ருர்: ''மக்கள் மத்தியிலான முரண்பாடுகளை எமக்கும் எதிரிக்குமிடையிலானவற்றிலிருந்து பிரித்தறிவதும் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் வர வர அதிகமாக ஸ்திரப்படுத்தப்படவும், பலபடுத்தப்படவும்' சோஷலிஸ அமைப்பு அபிவிருத்தி செய்யப்படவும் கூடியதாக, ''மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைச் சரியாகக் கையாழ்வது''ம்அவசியம்.

## சர்வாதிகாரம் பிரயோகிக்க வேண்டும்

2. சோஷலிஸ சமுதாயம் கணிசமானளவு நீண்ட ஒரு வரலாற்றுக் கட்டத்தை நிரப்புகிறது. இந்தக் கட்டத்தில், வர்க்கங்களும், வர்க்க முரண்பாடுகளும், வர்க்கப்போராட்டமும் தொடர்கின்றன; சோஷலிஸப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்கும் அபாயமும் இருந்து வருகிறது. ''உற்பத்தி சாதனங்களுடைய சோஷலிஸ மாற்றியமைப்பு அடிப்படையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், ''வர்க்கப் போராட்டம் எவ்வகையிலும் முற்றுப் பெற்றுவிடவில்லை. தொழிலாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்

8 -ம் பக்கம் பார்க்க

# உலகப் புரட்சியின் மாபெரும்

# அல்பேனியத் த

**அல்பேனிய தொழிலாளர் கட்சி மத்திய கமிட்டியின் அரசியற் குழு அக்கத்தினரும் அல்பேனிய மக்கள் குடியரசு அமைச்சரவையின் தலைவருமான தோழர் மெஹ்மெத் ஷெஹூ தம் தலைமையிலான அல்பேனிய கட்சி, அரசாங்கப் பிரதிநிதி குழுவை கௌரவித்துச் சீன நகரான டஸினில் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரையின் முதற் பகுதியை இங்கு தருகிறோம். ஆ-ர்**

அன்புத் தோழர் காங்ஷென், அன்புத் தோழர் வாங் ஹ்ஸியா ஒ—யூ, தொழிலாளத் தோழர்களே, சீன மக்கள் விடுதலைச் சேனையின் போரளிகளே, ஷான்ருங் மாகாணத்தினதும்ட்ஸிஞன் நகரினதும் கருமஸ்தர்களே, புரட்சியாளர்களே, செங்காவலர்களே,

அல்பேனிய கம்யூனிஸ்டுகளினதும் மக்களினதும் பிரதிநிதிகளாகிய நாம் உங்கள் சக்திமிக்க நாட்டிற்கு நட்பு விஜயம் செய்துள்ளோம். இன்று, ஷான்ருங் மாகாணத்தினதும் ட்ஸிஞன் நகரினதும் தொழிலாளர்களும் விவசாயிகளும் எல்லாப் புரட்சிகர வெகுஜனங்களும் எமக்கு அளித்துள்ள கோலாகலமான, அன்பான, சுமுகமான வரவேற்பால் நாம் உணர்ச்சி வசப்பட்டுள்ளோம். இந்த உணர்ச்சியூட்டும், சகோதரத்துவ வரவேற்பிற்காக நாம் உங்களுக்கு மனமார நன்றி செலுத்துகிறோம். இதை நாம் நீங்களும் உன்னத சீன மக்கள் அனைவரும் எமது கட்சியிடத்தும் மக்களிடத்தும் நாட்டிடத்தும் பாராட்டும் ஆழ்ந்த அன்பின் ஒரு செறிந்த வெளிப்பாடாகக் கருதுகிறோம்.

## வீர வரலாறு பெற்ற மக்கள்

5 கோடி 70 லட்சம் ஜனத்தொகை கொண்டதான ஷன்ருங் மாகாணத்தின் இந்தத் தலை நகருக்கு, 72 நீரூற்றுகளால் புகழ்பெற்ற இந்த அழகான நகருக்கு, ஜப்பானிய ராணுவவாதத்திற்கும் கோமிண்ராங் பிற்போக்குக் கொள்ளைக்கூட்டத்திற்கும்எதிராக வீரத்துடன் போரிட்ட இந்த ட்ஸிஞன் நகருக்கு, விஜயம் செய்வது எமக்குப் பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நகரம் புகழ்மிக்க சீன கம்யூனிஸ்ட் கட்சியினதும் தோழர் மாஓ சே-துங்கினதும் தலைமையிலான வீரமிக்க சீன மக்கள் விடுதலைச் சேனையால் விடுதலையாக்கப்பட்டது. சோஷலிஸப் புரட்சியின் திடமான போராளிகளும் தலைவர் மாஓவின் மார்க்ஸிஸ-லெனினிஸ சிந்தனையை விசுவாசமாகப் பின்பற்றுவோருமான உங்களை இன்று சந்திப்பதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

எட்டு மாதங்களுக்கு முன்னர் நீங்கள், சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பதினோராவது விரிவான கூட்டத்தொடரில் அங்கீகரிக்கப்பட்ட, மகத்தான தொழிலாளி வர்க்க கலாசாரப் புரட்சிக்கான, புரட்சிகரக் கோட்பாட்டை உயர்த்திப் பிடித்தீர்கள். நீங்கள் விசாலமான "முத் 'துறைக் கூட்டணியை வெற்றிகரமாகச் சாதனையாக்கினீர்கள். முதலாளித்துவ பாதையை எடுத்த விரல்விட்டெண்ணக்கூடிய அதிகாரத்திலுள்ள கட்சி நபர்களுக்கெதிராகக் கிளர்ச்சி செய்து அவர்களை நசுக்கினீர்கள், தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் விதியை உறுதியுடன் உங்கள் சொந்தக் கரங்களில் எடுத்துக்கொண்டு, ஷான்ருங் மாகாண புரட்சிகர கமிட்டியையும் நிறுவினீர்கள். ட்ஸிஞனினதும் உங்கள் மகத்தான ஷான்ருங் மாகாணத்தினதும் மக்களுக்கு இதுவே 1948 செப்டம்பர் வெற்றியின் பின்பான மிகப் பெரும் வெற்றி. இந்த வெற்றி உங்கள் சோஷலிஸ தாய்நாடு முழுவதிலும் மகத்தான தொழிலாளி வர்க்க கலாசாரப் புரட்சியின் வெற்றிகரமான முன்னேற்றத்திற்குச் சாதகமான பிரமாண்டமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.



மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி நடத்தும் சீனத்து வாலிபர்களின் மத்தியில் தோழர் மாஓ.

உன்னத மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்ட்டான தோழர் மாஓ சே-துங்கைத் தலைவராக உடைய மகத்தான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ், ஏனைய சீன மக்களைப் போலவே ட்ஸிஞனினதும் ஷான்ருங்கினதும் மக்களும் இருபது ஆண்டுகளுக்குள்ளாகச் சோஷலிஸ நிர்மாணத்தில் பெரும் சாதனைகளை ஈட்டியும், மகத்தான தொழிலாளி வர்க்க கலாசாரப் புரட்சியில் உன்னத வெற்றிகளை ஈட்டியும் உள்ளனர்.

## கம்யூனிஸ வாழ்த்துக்கள்

அல்பேனிய கட்சி, அரசாங்கப் பிரதிநிதி குழுவினதும் அல்பேனிய கம்யூனிஸ்டுகளினதும் அல்பேனிய மக்கள் அனைவரதும் சார்பாகவும், எம் தலைவர் தோழர் அன்வர்ஹோஜாவின் பெயரிலும் இச் சந்தர்ப்பத்தில் புரட்சிகர தொழிலாளர்களும் செங்காவலர்களும் ம. வி. சே. பிரதிநிதிகளும் ட்ஸிஞனின் புரட்சிகர இயங்குனர்களும் ஷான்ருங் மகாணத்தின் புரட்சிகர மக்கள் அனைவருமான உங்களுக்கு எமது இதய பூர்வமான கம்யூனிஸ்ட் மரியாதையைச் செலுத்தவும், உங்களுக்கு மகத்தான தொழிலாளி வர்க்க கலாசாரப் புரட்சியில் பூரண வெற்றியீட்ட வாழ்த்தவும் என்னை அனுமதியுங்கள்.

உங்கள் நாட்டுக்கு எமது பிரதிநிதி குழுவின் விஜயம் சீனாவில் இரு பெரும் நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயத்தில் இடம் பெறுகிறது. இவை சீன மக்களின் புரட்சி வெற்றி பெற்றுச் சீன மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்ட 18-வது ஆண்டு நிறைவும், சீனா முழுவதிலும் வீசும் மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியாகிய பெரும் புயலுமாகும். இவ்விரு புரட்சிகளும் சீன மக்களின் வாழ்வில் இரு பெரும் நிகழ்ச்சிகளாகும். இவை உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரு புரட்சிகள்.

## புரட்சிகர புயலின் மையம்

சீன மக்கள் புரட்சியின் வெற்றியும் சீன மக்கள் குடியரசின் ஸ்தாபிதமுமே உலக மக்களின் விதியில் ருஷ்ய அக்டோபர் புரட்சியின் பின்பான மிகப் பெரிய, மிக முக்கியமான புரட்சிகர முனையாகும். இந்தப் புரட்சி சீனாவில் நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய அடக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் முடிவுகட்டி, சீனா சோஷலிஸ அபிவிருத்திப் பாதையை எடுக்கக் கூடியதாக்கி, ஏகாதிபத்தியத்தின் பின் அணியில் மரண அடியொன்றைக் கொடுத்து, உலக சக்தி சமன்பாட்டில் சோஷலிஸத்திற்குச் சாதகமான பிரமாண்டமான மாற்றமொன்றை ஏற்படுத்தியது. சீனப்புரட்சி சகல புரட்சிகர மக்களும், விசேஷமாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களும் படிப்பினை பெறுவதற்கு மிகுந்த அனுபவத்தைக் கொண்டதான ஓர் உதாரணமாகியுள்ளது. இன்று ஆசியாவும் ஆபிரிக்காவும் லத்தீன் அமெரிக்காவும் எமது காலத்தில் புரட்சிகரப் புயலின் மையமாக ஆகியுள்ளன.

சீன கம்யூனிஸ்ட் கட்சியினதும் சீன மக்களினதும் மாபெரும் தலைவரான தோழர் மா சே-துங் நேரிற் தொடக்கி வைத்துத் தலைமை தாங்கும் மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி சீனப் புரட்சியின் ஒரு தொடர்ச்சியும் அபிவிருத்தியுமாகும். இது ஒரு புதிய ரகமான புரட்சி, தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழான, முன்னுதாரணமற்ற ஒரு புரட்சி. இந்தப் புரட்சி உள்ளடக்கத்தில் ஆழ்ந்ததும், இலக்கில் உன்னதமானதும், குறியிற் சரியானதும், செயலில் புரட்சிகரமானதுமாகும். இது எதிரெதிரான இரு நெறிகளுக்கும், எதிரெதிரான இரு வர்க்கங்களுக்கும், எதிரெதிரான இரு பாதைகளுக்கும் இடையிலான ஒரு கடும் வர்க்கப் போராட்டமாகும். இப் புரட்சியின் கொடுமுனை முதலாளித்துவப் பாதையை எடுக்கின்ற விரல் விட்டெண்ணக் கூடிய அதிகாரத்திலுள்ள கட்சி நபர்களுக்கெதிராகக் குறிவைத்தது. இம் மகத்தான புரட்சி, முதலாளி வர்க்கத்தின் ஏவலர்களான திரிபுவாதிகள் அரசியல் அதிகாரத்தைக் கவர்ந்து கொள்ளாதபடி தடுப்பதையும் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பாதுகாப்பதையும் சீனாவில் புரட்சியும் சோஷலிஸமுமாகிய இலட்சியத்தை முன்னேற்றுவதையும் நோக்கமாகக் கொண்டது. இந்தக் கருத்து நிலையிலிருந்து நோக்கினால், மகத்தான தொழிலாளி வர்க்க கலாசாரப் புரட்சியின் பூரண வெற்றியானது முதலாளி வர்க்கத்தின் மேல் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு வெற்றியும், எதிர்ப்—புரட்சியாளர்களின் மேல் புரட்சியாளர்களின் ஒரு வெற்றியும், முதலாளித்துவத்தின் மேல் சோஷலிஸத்தின் ஒரு வெற்றியும், சீனாவின் குருஷ்சோவும் அவரைப் பின்பற்றுவோரான பெங்ரெஹ்-ஹூஆய், பெங் சென். லோஜூய்-சிங், லூ ரிங்-யீ, ராஒ சூ ஆகியோரும் பிறரும் பிரதிநிதித்துவம் செய்கின்ற முதலாளித்துவ பிற்போக்கு நெறியின் மேல் தலைவர் மாஓ பிரதிநிதித்துவம் செய்கின்ற புரட்சிகர நெறியின் ஒரு வெற்றியுமாகும்.

## கலாச்சாரப் புரட்சியின் முக்கியத்துவம்

ஆகவே, மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் வெற்றியே சீன மக்களின் வரலாற்றில் 1949 அக்டோபரில் மக்கள் புரட்சியை அடுத்து இரண்டாவதுதான மாபெரும் வெற்றி எனக் கூறச் சகல காரணங்களுமுண்டு. சீன மக்கள் குடியரசின் ஸ்தாபிதம் சீனாவின் சோஷலிஸப் புரட்சிக்கும் சோஷலிஸ நிர்மாணத்திற்கும் வழியைத் திறந்து விட்ட ஒரு பெரும் மக்கள் புரட்சியின் வரலாற்று முக்கியத்துவ மிக்க வெற்றியென்றால், மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் வெற்றி புரட்சியின் பயன்களுக்குக் குழி தோண்டப்படுவதையும் சீனாவில் முதலாளித்துவம் திரும்பப் புகுவதையும் தடுக்கும் ஒரு வெற்றியாகும்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியினதும் தலைவர் மா சே-துங்கினதும் வரலாற்று முக்கியத்துவ மிக்க பெரும் சாதனை அவர்கள் நிலப்பிரபுக்களினதும் முதலாளிகளினதும் ஏகாதிபத்தியவாதிகளினதும் ஆட்சியை எப்படி வீழ்த்துவது, சோஷலிஸப் புரட்சியையும் சோஷலிஸ நிர்மாணத்தையும் எப்படி நடத்துவது என்பவற்றைச் சீனாவின் தொழிலாளி வர்க்கத்திற்கும் சீன மக்களுக்கும் கற்பித்துள்ளனர் என்பது மட்டுமன்றி, அவர்கள் உள்நாட்டிலும் உலகிலுமான தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அனுபவத்தை, குறிப்பாகத் திரிபுவாதக் கும்பல்கள் அதிகாரத்துக்கு வந்துள்ள சோவியத் யூனியனிலும் மற்றும் சில சோஷலிஸ நாடுகளிலும் நிகழ்ந்துள்ள திரிபுவாத விநாசங்களின் அனுபவத்தை, தொகுத்துக் கண்டுள்ளனர் என்பதுமாகும்.

# ம் ஒளி விளக்கு மக்கள் சீனம்

# தலைவர் மெஹ்மெத் ஷெஹு முழக்கம்

அவர்கள் 70 கோடி புரட்சிகர சீன மக்களுக்கு மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியிற் தலைமை தாங்கியும், திரிபுவாதத்தைக் கட்டுப்படுத்துவது எவ்வாறென்றும், முதலாளித்துவம் திரும்பப் புகுவதைத் தடுப்பது எவ்வாறென்றும், சோஷலிஸத்தின் வெற்றிப் பயன்களைப் பாதுகாப்பது எவ்வாறென்றும், மக்கள் சீனம் ஒருபோதும் தன் அரசியல் நிறத்தை மாற்றிக் கொள்ளாதவாறும், எப்போதும் சர்வதேச கம்யூனிஸத்தின் சக்தி மிக்க முன் படையாக வீரத்துடன் முன் செல்லுமாறும் உறுதிப்படுத்துவது எவ்வாறென்றும் அவர்களுக்குக் கற்பித்தும் வருகின்றனர்.

## உலக புரட்சிகர மக்கள் போற்றுகின்றனர்

இந்தப் புரட்சி சீன மக்களின் கதிக்கு மட்டுமின்றி, எல்லா நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்கும் புரட்சிகர மக்களுக்கும், ஏகாதிபத்தியம், நவீன திரிபுவாதம் ஆகியவற்றிற்கும் எதிரான போராட்டத்திற்கும், உலகப் புரட்சி இலட்சியத்திற்கும் கூட ஜீவ மரண முக்கியத்துவமுடையதாகும். சீன மக்கள் குடியரசே சோஷலிஸத்தின் பலமிக்க கொத்தளமும் மார்க்சிஸ—லெனினிஸத்தின் துவஜந் தாங்கியும் உலகின் மக்களுக்கு சக்தி வாய்ந்த புரட்சிகரத் தளமுமாகும், அது, ஏகாதிபத்தியவாதிகளுக்கும் நவீன திரிபுவாதிகளுக்கும் சகல பிற்போக்காளர்களுக்கும் அவர்களின் எதிர்ப்புரட்சிகர திட்டங்களைச் செயலாக்குவதில் கடக்க முடியாத ஒரு தடங்கலாகும். சோவியத் யூனியனின் திரிபுவாத விநாசம் சீனவிலும் நிகழ அனுமதிக்கப்பட்டால் அது சீன மக்களுக்கும் உலகெங்கணும் உள்ள மக்களுக்கும் எத்தகைய பயங்கரமான பாதிப்பை விளைவிக்குமென்பது அனைவருக்கும் தெளிவு. எனவேதான், முதலாளி வர்க்கத்தினதும் ஏகாதிபத்தியவாதிகளினதும் குருஷ்சோவ் திரிபுவாதிகளினதும் கம்யூனிஸ-விரோத, சீன—விரோதச் சதிகள் தோல்வியுற்றதை உலகின் கம்யூனிஸ்டுகளும் புரட்சிகர மக்களும் போற்றிக் கொண்டாடுகின்றனர். அவர்கள் மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சார புரட்சியை வரவேற்று, அதன் வெற்றியை மகிழ்ச்சிக்கும் ஊக்கத்திற்கும் காரணமாகக் கருதுகின்றனர்.

அல்பேனிய தொழிற்கட்சியும் எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் அல்பேனியாவின் மக்கள் அனைவரும் சீன கம்யூனிஸ்ட் கட்சியோடும் சீன மக்களோடும் தகர்க்க முடியாத புரட்சிகரமான தீவிர நட்பொன்றை உருவாக்கிக் கொண்டுள்ளனர், அவர்களைத் தம் மிக நெருங்கிய, மிக மகத்தான, மிக விசுவாசமான நண்பர்களாயும் சகாக்களாயும் சகோதரர்களாயும் கருது கின்றனர். அவர்கள் மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சிக்குப் பரிபூரண ஆதரவு தந்துள்ளனர், தந்து வருகின்றனர்; சீனவின் குருஷ்சோவும் அவரைப் பின் பற்றுபவர்களும் முதலாளித்துவ, திரிபுவாத எதிர்ப் புரட்சிகர நெறியைப் பின் பற்றுவதற்காக அவர்களை நிந்திக்கின்றனர், சீன மக்களின் மகத்தான தலைவரும் அல்பேனிய மக்களின் மிக மதிப்புவாய்ந்த, மிக மரியாதைக் குரிய, அன்பான நண்பருமான தோழர் மா-சே துங்கின் மார்க்சிஸ-லெனினிஸ புரட்சிகர நெறியைப் பூரணமாக ஆதரிக்கின்றனர்.

எமது நாட்டின் கட்சி அங்கத்தினர்களும் மக்களும் சீனவின் மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் அபிவிருத்தியை ஆழ்ந்த அக்கறையுடன் அவதானிக்கின்றனர். இந்த மகத்தான புரட்சியிலான ஒவ்வொரு வெற்றியையும் நாம் எமது சொந்தப் புரட்சியிலான ஒரு வெற்றியாகவே கருதுகிறோம்.

## பழையவற்றிற்குப் பலத்த அடி

கட்சியின் தலைமையின் கீழ், தொழிலாளர், விவசாயிகள் படைவீரர் வெகுஜனங்கள்—மகத்தான தொழிலாளிவர்க்க கலாச்சாரப் புரட்சியின் பிரதான சக்தி—புரட்சிகர மாணவர்கள், புரட்சிகர புத்தி ஜீவிகள், புரட்சிகர இயக்குனர்கள் ஆகிய அனைவரும் பெருமளவு வேலை செய்துள்ளனர். அவர்கள் பழைய உலகின் அழுக்கு முழுவதற்கும் பழைய சுரண்டும் வர்க்கங்களின் கருத்துக்கள், கலாச்சாரம், வழக்கங்கள் பழக்கங்கள் எல்லாவற்றிற்கும் நொருக்கும் அடிகள் கொடுத்துள்ளனர். அவர்கள் முதலாளித்துவ பாதையை எடுக்கும் விரல்விட்டெண்ணக் கூடிய அதிகாரத்திலுள்ள நபர்களை அம்பலப்படுத்தியும், அவர்களுக்கு அடிகொடுத்தும் உள்ளதோடு, அவர்களை முற்ருகத் தூளாக்கியும் வருகின்றனர். அவர்கள் விஞ்ஞான, இலக்கிய, கலை வட்டாரங்களிலான பிற்போக்கு முதலாளித்துவ அறிவு ''விற்பன்னர்'' களை வீழ்த்தியும் முற்ருக மதிப்பிழக்கச் செய்தும் உள்ளனர். அவர்கள் சோஷலிஸ பொருளாதார அடித்தளத்துடன் பொருந்தாதவையான மேற்கட்டின் பகுதிகளை மாற்றியுள்ளனர், மாற்றி வருகின்றனர். இவ்வாருக மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி சீனவைத் தற்போது அச்சுறுத்திவரும் அபாயத்தை அகற்றியுள்ளது மட்டுமல்லாமல், திரிபுவாதத்தை பரப்புவதும் முதலாளித்துவம் திரும்பப் புக உதவுவதுமான சமூக அடித்தளம் முழுவதையும் ஒழித்துக் கட்டியும், அவ்வாருக சோஷலிஸத்தின் வெற்றியையும் கம்யூனிஸத்தை நோக்கி முன்னேறுவதையும் என்றென்றைக்கும் உறுதிப்படுத்தியும் வருகிறது.

சீனவின் மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி ஏகாதிபத்திய வாதிகளினதும் திரிபுவாதிகளினதும் சகல நகடுகளின் பிற்போக்காளர்களினதும் தொழிலாளி வர்க்கத்தின் துரோகிகளினதும் மனங்களிற் பீதியூட்டியுள்ளது. அவர்கள் சீன கம்யூனிஸ்ட் கட்சியையும் சீன மக்களையும் நச்சுத்தனமாகத் தாக்குகின்றனர், குறிப்பாக மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியையும் தோழர் மா சே-துங்கையும் சபிக்கின்றனர். பிரஷ்னெவ், கொசிஜின் ஆகியோரின் சோவியத் திரிபுவாதக் கும்பலின் தலைமையிலான குருஷ்சோவ் திரிபுவாதிகள் இந்தச் சீன விரோத தாக்குதலில் நச்சுத்தனமான முன்னணிப் படையினராகச் செயல் படுகின்றனர். இதுஎமக்கு மகிழ்ச்சி தரும் ஒரு பெரும் சம்பவம். ஏனெனில் இது சீனவின் மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி விரோதிகளைப் பொறுத்த இடத்தில் தாக்கியுள்ளது எனக் காட்டுகிறது. அவர்களின் ஆவேசம், சீனவில் முதலாளித்துவ, திரிபுவாதச் சதிகள் பங்கலோட்டானதை யிட்டு அவர்களின் மனக் குழப்பத்தையும், புரட்சியிலும் சீனவின் உதாரணம் எல்லா நாடுகளினதும் புரட்சியாளர்களையும் மக்களையும் புரட்சியில் எழுந்து தங்கள் ஆட்சியை வீழ்த்தத் தூண்டிவிடுமேயென்ற அவர்களின் அச்சத்தையும், சீன மக்களின் பெரும் புரட்சிகரப் புயலை, சீன மக்கள் தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் எனக்காட்டும் புரட்சிகரப் புயலை, குறித்து அவர்களின் முற்ருன கிலேசத்தையும் வெளிக்காட்டுகிறது.

## எதிரி தாக்குவது நல்லதே

''நாம் விரோதியினுல் தாக்கப்பட்டால் அது நல்லது, ஏனெனில் நாம் விரோதிக்கும் எமக்கும் இடையில் தெளிவான ஒரு எல்லைக் கோட்டை வரைந்து கொண்டுள்ளோம் என்பதை அது நிருபிக்கிறது. விரோதி எம்மை மூர்க்கமாகத் தாக்கி, முற்றும் கருப்பாயும் தனியொரு நல்ல அம்சம் கூட இல்லாதவர்களாயும் காட்டமுற்பட்டால் அது இன்னும் நல்லது. நாம் விரோதிக்கும் எமக்குமிடையில் தெளிவான ஒரு எல்லைக் கோட்டை வரைந்து கொண்டுள்ளது மட்டுமல்லாமல், எமது வேலையிற் பெருமளவு சாதனையும் ஈட்டியுள்ளோம் என அது காட்டுகிறது'' எனத் தோழர் மா சே-துங் கூறுகிருர்.

சீனவின் மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியை ஈட்டுகிறது. சீன கம்யூனிஸ்ட் கட்சி ஒரு உன்னத மார்க்சிஸ லெனினிஸக் கட்சி என்பதையும் மக்கள் சீன ஒரு உன்னத சோஷலிஸ நாடும் புரட்சியின் தகர்க்க முடியாத ஒரு கொத்தளமும் ஆகும் என்பதையும், மா சே-துங் ஒரு மகத்தான தலைவரும் மகத்தான மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டும் மகத்தான தொழிலாளி வர்க்கப் புரட்சியாளருமாவார் என்பதையும், சீனவை எந்த சக்தியாலும் பின்னுக்குத் திருப்பிவிட இயலாது என்பதையும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமுள்ள சீனவின் விரோதிகளின் சதிகள் எல்லாம் தோற்றே தீரும் என்பதையும் இது மீண்டும் முழு உலகிற்கும் தெளிவாகக் காட்டுகிறது.


## இலக்கை அடையும்

மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியே வரலாற்றில் மிகப் பரந்ததும் மிக ஆழ்ந்ததும் மிக உன்னதமானதுமான புரட்சிகர வெகுஜன இயக்கம். இது தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழான விரிவான ஜனநாயகத்தை உண்மையாக வெளிப்படுத்துகிறது. இது வெகுஜனங்கள் தங்கள் தீவிர முன்னேற்றத்தையும் சிருஷ்டிகரத் தன்மையையும் முன்னென்றுமில்லாதவாறு செயல்படச் செய்வதை விசேஷ குணதிசயமாகக் கொண்டது. இது நிச்சயமாகத் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத் தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் புதிய, மிக மதிப்பு வாய்ந்த அனுபவத்தைச் சேர்த்து அவற்றை வளப்படுத்தும். இந்த இயக்கங்களின் ஊடு நாம் வெகுஜன நெறி மேலும் பரவலாயும் உறுதியாயும் அமுலாக்கப்படுவதைக் காண்கிருேம். வெகுஜனங்களில் முற்ருன நம்பிக்கையையும் அவர்களிற் தங்கி நிற்பதையும் அவர்களைத் துணிவுடன் தட்டியெழுப்புவதையும் அவர்களின் புரட்சிகர முன்னேற்றத்திற்கும் சிருஷ்டித்திரனிற்கும் மரியாதையையும் காண்கிருேம். இதுவே சீன கம்யூனிஸ்ட் கட்சியினதும் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தினதும் பெரும் பலத்திற்கும் தகர்க்க முடியாத வலுவிற்கும் தோற்றுவாயும் மகத்தான தொழிலாளிவர்க்க கலாச்சாரப் புரட்சி சகல தடங்கல்களையும் தகர்த்துத் அதன் சீரிய இலக்கை அடையும் என்பதற்கு உத்தரவாதமும் ஆகும்.

## சீனம் மபெரும் மார்க்ஸிய பாடசாலை

மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி தோழர் மா சே-துங்கின் மகத்தான மார்க்சிஸ—லெனினிஸ

—10-ம் பக்கம் பார்க்க



# உலகம் புதிய சகாப்தத்தில் பிரவேசித்துள்ளது

—5-ம் பக்கத் தொடர்

கும் இடையிலான வர்க்கப் போராட்டமும், வெவ்வேறு அரசியற் சக்திகளுக்கும் இடையிலான வர்க்கப் போராட்டமும், தொழிலாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையில் தத்துவார்த்தத் துறையிலான வர்க்கப் போராட்டமும் தொடர்ந்தும் நீண்டவையாயும், சிரமமிக்கவையாயும், சிற்சில சமயங்களில் கூர்மையடைந்தும் கூட இருந்து வரும்.'' முதலாளித்துவம் திரும்பப் புகுவதையும், ''சமாதான பரிணமத்தை''யும் தடுக்க வேண்டி, அரசியல் தத்துவார்த்த முனைகளில் சோஷலிஸப்புரட்சியை இறுதி வரை நடத்தி முடிப்பது இன்றியமையாதது.

3. தொழிலாளி வர்க்கத்தின் கீழான வர்க்கப்போராட்டம் சாராம்சத்தில் இன்னும் அரசியல் அதிகார விஷயமே. அதாவது, வேறு வார்த்தைகளில் கூறினல், முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தை வீழ்த்த முயலுகையில் தொழிலாளி வர்க்கம் அதை ஸ்திரப்படுத்த முயல்கிறது. முதலாளி வர்க்கத்தின் பல்வேறு கலாச்சாரத் துறைகள் உள்ளிட்ட ''மேலடுக்குகளின்'' துறையில் தொழிலாளி வர்க்கம் சகல வகைகளிலும் சர்வாதிகாரம் பிரயோகிக்க வேண்டும். ''அவர்களுடன் எமது உறவு எந்த வகையிலும் சமத்துவமான ஒன்ருக இருக்க முடியாது. அதற்கு நேர்மாருக, அது ஒரு வர்க்கம் மற்றொன்றை அடக்குகின்ற ஓர் உறவு. அதாவது, முதலாளி வர்க்சத்தின் மீது தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் ஆகும். சமத்துவ உறவு என அழைக்கப்படுவது, சுரண்டுகின்ற, சுரண்டப்படுகின்ற வர்க்கங்களுக்கிடையில் சமாதான சக வாழ்வு, இரக்கம், பெருந்தன்மை ஆகியன போன்ற மற்றெந்த விதமான உறவும் இருக்க முடியாது.''

## இனம் கண்டு கொள்ள வேண்டும்

4. சமுதாயத்தில் இரு வர்க்கங்களுக்கிடையிலும் இரு பாதைகளுக்கும் இடையிலுமான போராட்டம் தவிர்க்க முடியாதபடி கட்சிக்குள் பிரதிபலிக்கப் படுகிறது. முதலாளித்துவப் பாதையை எடுக்கும் விரல்விட்டு எண்ணி விடக்கூடிய சிறு தொகையினரான அதிகாரத்திலுள்ள கட்சி நபர்கள், கட்சிக்குள் முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளாவர். அவர்கள் ''ஒரு எதிர்ப் புரட்சிகர திரிபுவாதிகள் கூட்டம். ஒரு கால் சூழ்நிலைகள் முற்றியதும் அவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு, தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தை முதலாளி வர்க்கத்தின் ஒரு சர்வாதிகாரமாக மாற்றி விடுவர்'' தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக, ''எம் அருகில் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கும்'' ''குருஷ்சோவை ஒத்த நபர்களை'' நாம் இனம் கண்டு கொள்ளவும், அவர்களை முற்ருக அம்பலப்படுத்தவும், விமர்சிக்கவும், மறுத்துரைக்கவும், வீழ்த்தவும், அவர்கள் மீண்டும் ஒரு போதும் எழுந்திருப்பதை அசாத்தியமாக்கவும் மிகுந்த கவனம் செலுத்தவும் அவர்கள் கவர்ந்துள்ள அதிகாரத்தை தொழிலாளி வர்க்கத்திற்காக மீண்டும் உறுதியுடன் கைப்பற்றவும் வேண்டும்.

## மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி

5. மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி நடத்தப்படுவது தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சி தொடர்வதற்கு மிகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

''மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியில் ஒரே முறை, வெகு ஜனங்கள் தம்மைத் தாமே விடுதலையாக்கிக் கொள்வது தான்''. ''வெகுஜனங்கள் இந்தப் பெரும் புரட்சிகர இயக்கத்தில் தமக்குப் போதமூட்டிக் கொள்ளட்டும்.'' வேறு வார்த்தைகளில் கூறினல், இந்தப் புரட்சி தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் விரிவான ஜனநாயகத்தைக் கொண்டு, வெகுஜனங்களைக் கீழே் இருந்து துணிகரமாகத் தட்டி எழுப்பியும், அதே நேரத்தில் தொழிலாளி வர்க்கப் புரட்சியாளர்களின் பெரும் கூட்டணியையும் புரட்சிகர வெகுஜனங்கள், மக்கள் விடுதலைச் சேனை, புரட்சிகர ஊழியர்கள் ஆகியோரின் ''முக்கிய கூட்டணி''யையும் உருவாக்கியும் வருகிறது.

6. ''சுயநலத்திற்கு எதிராகப் போரிடு; திரிபுவாதத்தை நிராகரி'' என்பதே தத்துவார்த்தத் துறையில் மகத்தான தொழிலாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் அடிப்படை வேலைத்திட்டம். ''தொழிலாளி வர்க்கம் தனது சொந்த உலகக் கண்ணேட்டத்திற்கிணங்க, உலகை மாற்றியமைக்க முயல்கிறது. முதலாளி வர்க்கமும் அவ்வாறே.'' எனவே, மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி மனிதர்களின் உள் ஆழத்தைத் தொடுவதும், அவர்களின் உலகக் கண்ணேட்டப்பிரச்சினையைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டதுமான ஒரு மாபெரும் புரட்சியாகும். நாம் திரிபுவாதத்தை அரசியல் ரீதியிலும், தத்துவார்த்த ரீதியிலும், தத்துவ ரீதியிலும் விமர்சித்து நிராகரிக்கவும், முதலாளித்துவத் தன்னலவாதத்தையும், தொழிலாளி வர்க்கத்தினல்லாத கருத்துக்கள் எல்லாவற்றையும் கடப்பதற்கும், சோஷலிஸ பொருளாதார அடித்தளத்துடன் பொருத்தமாக இல்லாத கல்வியையும், இலக்கியத்தையும், கலையையும், மேலடுக்குகளின் மற்றெல்லாப் பகுதிகளையும் மாற்றியமைப்பதற்கும், தொழிலாளி வர்க்கத் தத்துவார்த்தத்தை உபயோகிக்கவும், அவ்வாருக திரிபுவாதத்தை வேரோடு கல்லி எடுக்கவும் வேண்டும்.

## உரை கல்

தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சி தொடர்வது பற்றிய தத்துவத்தை முன் வைத்ததன் மூலம் தோழர் மா சே-துங், தொழிலாளி வர்க்க சர்வாதிகார காலக்கட்டத்தில் வர்க்கப் போராட்டமாகிய மார்க்சிஸ-லெனினிஸக் கருத்தை ஆக்கபூர்வமாகவும், மேதாவிலாசத்தோடும் அபிவிருத்தி செய்துள்ளதோடு, தொழிலாளி வர்க்க சர்வாதிகாரமாகிய கருத்தையும் மேதாவிலாசத்தோடு அபிவிருத்தி செய்துள்ளார். இது சகாப்த சாதகமான முக்கியத்துவ முடையதும், மார்க்சிஸத்தினது அபிவிருத்தியின் வரலாற்றில் மூன்ருவது பெரும் மைல் கல்லைப் பிரதிநிதித்துவம் செய்வதும் ஆகும்.

# புரட்சியின் மையம் சீனவுக்கு மாறிவிட்டது

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் லெனின், ''வர்க்கப் போராட்டத்திற்கு அங்கீகாரத்தை தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும் அங்கீகாரமாக விஸ்தரிப்பவன் எவனே அவன் மட்டுமே மார்க்சிஸ்ட். இதுவே மார்க்சிஸ்டுக்கும் சாதாரண (அதே போல-பெரும்) சிறு முதலாளித்துவ வாதிக்கும் இடையிலான மிக ஆழ்ந்த வேற்றுமையாக அமைகிறது. இதுவே, மார்க்சிஸத்தின் உண்மையான விளக்கமும் அங்கீகாரமும் சோதிக்கப் படுவதற்கான உரைகல்'' என வலியுறுத்தினர். இப்போது, தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு அங்கீகாரத்தைத் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர வேண்டிய தேவைக்கும் அங்கீகாரமாக விஸ்தரிப்பவன் எவனே அவன் மட்டுமே உண்மையான மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் என நாம் கூறலாம். இதுவே, மார்க்சிஸ—லெனினிஸத்தின் உண்மையான விளக்கமும் அங்கீகாரமும் சோதிக்கப் படுவதற்கான உரைகல்.

## பாதை அமைக்கப்பட்டு விட்டது

மகத்தான ஒக்டோபர் சோஷலிஸப் புரட்சி தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வழிதிறந்து விட்டது. ஒக்டோபர் புரட்சியின் அடிப்படையான அனுபவம் ஏகாதிபத்தியத்தினதும், தொழிலாளி வர்க்கப் புரட்சியினதும் சகாப்தத்தில் புரட்சி செய்வதற்கான சர்வவியாபக நியதியை எடுத்துரைக்கிறது. சீனவின் மகத்தான தொழிலாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஸ்திரப்படுத்துதலுக்கும், முதலாளித்துவம் திரும்பப் புகுவதைத் தடுப்பதற்கும், கம்யூனிஸத்திற்கு முன்னேறுவதற்கும் வழி திறந்து விட்டுள்ளது. கலாச்சாரப் புரட்சியின் அடிப்படையான அனுபவம் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஸ்தாபித்ததைத் தொடர்ந்து கம்யூனிஸத்திற்கு மாறும் வரலாற்றுக் கட்டத்தில் வர்க்கப் போராட்டத்தின் சர்வ வியாபக நியதியை எடுத்துரைக்கிறது.

எதிர்காலத்தில் பல்வேறு புதிய பிரச்சினைகள் எழவும், கஷ்டங்களும் நெளிவு சுளுவுகளும் இருக்கவும் கூடும். இருப்பினும், சீனவின் மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் வெற்றியோடு, லெனின் ஒக்டோபர் புரட்சியின் முக்கியத்துவத்தைக் கணிப்பிடுகையில் கூறியது போல் ''முக்கியமான காரியம் உறைபனி உடைக்கப்பட்டு விட்டது-வீதி திறக்கப்பட்டும் பாதை சமைக்கப்பட்டும் விட்டன'' என்பதே.

## தேசிய எல்லைக்குட்பட்ட பிரச்சினையல்ல

ஸ்டாலின் கூறினர்: ''ஒக்டோபர் புரட்சி வெறுமனே தேசிய எல்லைகளுக்கு உட்பட்ட ஒரு புரட்சியாகக் கருதப்படக் கூடாது. அது பிரதானமாக ஒரு சர்வதேச, உலகத் தரமான ஒரு புரட்சி'' ஒக்டோபர் புரட்சியைப் போன்று ''சீனவின் மகத்தான தொழிலாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியும் வெறுமனே தேசிய எல்லைகளுக்கு உட்பட்ட புரட்சியல்ல; அவ்வாறே அதுவும் சர்வதேசியத் தரமான ஒரு புரட்சி. இம் மாபெரும் புரட்சி உலகெங்குமுள்ள தொழிலாளி வர்க்கத்தினதும், புரட்சிகர மக்களினதும் உற்சாகமான ஆதரவை வென்றெடுத்துள்ளது. இதன் பெரும் வெற்றி, சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தில் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்துள்ளது. மனித குலத்தின் வரலாற்றுப் போக்கில் நிச்சயமாகப் பெரும் செல்வாக்கைச் செலுத்தும்.

முன்னேறிய புரட்சிகர தத்துவம் எப்பொழுதும் அது வழி நடத்தும் புரட்சிகரப் போராட்டத்தின் பெரும் வெற்றியோடு கூடவே விசாலமாகப் பரவுகிறது. மார்க்சிஸம் லெனினிஸம் பரவுவதற்கு 50 வருடத்திற்கு முன்னர் ஒக்டோபர் புரட்சி மிகப் பெருமளவு தூண்டுதல் தந்ததினல் உலகப் புரட்சி முற்றிலும் புதிய ஒரு தோற்றத்தை எடுத்தது. தோழர் மாசே-துங்கின் வழிகாட்டலின் கீழ் 1949-ல் சீனப் புரட்சியின் வெற்றியோடு உலகம் மேலும் அதியந்தமான மாற்றத்தையடைந்துள்ளது. சீனவின் மகத்தான தொழிலாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி, ஒரு வருட காலத்திற்குச் சற்றுக் கூடிய குறுகிய காலத்தில் சீனவின் குருஷ்சோவின் தலைமையிலான முதலாளித்துவ தலைமை ஸ்தானத்தை நசுக்கியும், சுரண்டும் வர்க்கங்களை முற்ருக மதிப்பிழக்கச் செய்தும் உள்ளது. இந்தப் பெரும் வெகுஜன அணித் திரட்சி உலகை உலுப்பியும், உலக மக்களின் பங்கிலான மாசே-துங்கின் சிந்தனை பற்றிய விளக்கத்தைப் புதியதும் உயர்ந்ததுமான ஒரு மட்டத்திற்கு முன்னெடுத்துச் சென்று, அதை முன்னெப்போதையும் விட மேலும் மிக வளமுற்றதாயும், ஆழ்ந்ததாயும் செய்தும் உள்ளது.

## தொழிலாளி வர்க்கத்தின் மிகப்பெரும் ஆசான்

தலைவர் மாசே-துங்தான் தற்போதைய சகாப்தத்தில் தொழிலாளி வர்க்கத்தின் மிகப்பெரும் ஆசானும் மிகச் சிறந்து விளங்கும் தலைவரும் ஆவார் என்பதையும், உலகின் புரட்சிகர மக்கள் வரவர அதிக தெளிவாகப் புரிந்து கொள்ளத் தலைப்பட்டுள்ளனர். மா சே-துங்கின் சிந்தனை தற்போதைய கட்டத்தில் மிக உச்சத்தை எட்டிய மார்க்சிஸ-லெனினிஸமாகும். ஏகாதிபத்தியவாதிகளினதும் திரிபுவாதிகளினதும் சகல நாடுகளின் பிற்போக்குவாதிகளினதும் மனங்களில் பீதியைத் தோற்றுவிக்கின்ற மார்க்சிஸ—லெனினிஸமாகும்; தொழிலாளி வர்க்கத்தினதும் புரட்சிகர வெகுஜனங்களினதும் மிகச் சக்திவாய்ந்த தத்துவார்த்த ஆயுதமாகும்.

மாசே-துங்கின் சிந்தனை பரப்பப்பட்டதோடு, மார்க்சிஸ-லெனினிஸத்திற்கும்

9-ம் பக்கம் பார்க்க

# நெல்லியடியில் அக்டோபர் தினம்

''தொழிலாளி வர்க்கத்தின் தியாகத்தின் மூலம், சிந்திய ரத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சோவியத் நாட்டின் 50-வது வருடாந்த விழாவில் லட்சக் கணக்கான ஏழை மக்களைச் சுரண்டி, பஞ்சத்தால் பட்டினி போட்டு சாகடிக்கும் இந்திய முதலாளித்துவத்தின் பிரதிநிதியான இந்திரா காந்தியும் கம்யூனிஸ இயக்கத்தின் துரோகியான டிட்டோவும் கௌரவ விருந்தினராக கிரம்ளினில் இருப்பது ஒன்றே சோவியத் ஆளும் கும்பல் வர்க்க உணர்வை மறந்து முதலாளி வர்க்கத்துடன் கூடிக் குலாவும் நாசகார திரிபுவாத பாதையில் சென்றுவிட்டனர் என்பதற்கு நல்லதோர் உதாரணம்'' என நெல்லியடியில் நடைபெற்ற ஒக்டோபர் புரட்சிதினகூட்டத்தில் பேசிய கம்யூனிஸ்ட கட்சியாழ் பிரதேச செயலாளர் தோழர் வீ. ஏ. கந்தசாமி குறிப்பிட்டார்.

வடமராட்சிப் பகுதியிலுள்ள கம்யூனிஸ்ட் வாலிப சங்கங்களின் அங்கத்தவர்களைக் கொண்ட இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் ''தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சி நிறுவப்பட்ட முதலாவது நாடான சோவியத் நாட்டில் இன்று தொழிலாளி வர்க்கத்தின் நலன்கள் புறக்கணிக்கப்படுவதுடன், மீண்டும் முதலாளித்துவத்தை ஏற்படுத்தவும், கேவலமான முதலாளித்துவ கலாச்சாரங்களை பரப்பவும் தற்பொழுது அங்கு ஆட்சி புரியும் திரிபுவாதிகள் முனைகின்றனர்.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது பாஸிச ஹிட்லரின் ஆக்கிரமிப்புக்கு எதிராக சோவியத் மக்கள் ஸ்டாலினின் தலைமையில் வெற்றிகரமாக நடத்திய வீரம் செறிந்த போராட்டத்தைப் பற்றி சோவியத் மக்களுக்கு எதுவுமே தெரியவிடாது மறைத்துள்ளதுடன், யுத்த பீதியை சோவியத் மக்கள் மத்தியில் பரப்புவதன் மூலம் அம் மக்கள் சர்வதேசிய வர்க்க உணர்வைப் பெறுமல் தடுப்பதுடன் உலகின் ஏனைய பாகங்களில் தமது விடுதலைக்காகப் போராடுகின்ற மக்களுக்கு உதவிபுரிய வேண்டுமென்ற வர்க்க நல்லுணர்வையும் சோவியத் திரிபுவாதிகள் மழுங்கடித்து வருகின்றனர் எனவும் கூறினார்.

சோவியத் நாட்டில் ஏற்பட்ட தவறுகளை நன்கு கற்றுணர்ந்து அத்தவறு சீனவில் ஏற்படாதிருப்பதற்காகத்தான் இன்று தலைவர் மா சே-துங்கின் தலைமையின்கீழ் மகத்தான கலாச்சாரப் புரட்சி சீனவில் நடைபெறுகிறதெனவும், அதன்மூலம் வர்க்க போராட்ட உணர்வு பெற்ற போராடும் மக்களின் தோழமை உணர்வு மிக்க ஒரு மனிதனை உருவாக்கும் மகத்தான இயக்கம்தான் கலாச்சாரப் புரட்சி எனவும் கூறிய அவர் புரட்சியின் ஒளிவிளக்கு மாஸ்கோவிலிருந்து பீங்கிங்ற்கு மாற்றப்பட்டுவிட்டதெனவும், அங்கிருந்த வண்ணம் உலக உழைப்பாளி வர்க்கத்திற்கு, போராடும் மக்களுக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கிறது எனவும் கூறினர்.

இலங்கை வாலிப சங்க சம்மேளனத்தின் உப செயலாளர் தோழர் கரவைக் கந்தசாமி பேசும்பொழுது ஒக்டோபர் புரட்சிக்கு துரோகம் செய்துவிட்ட திரிபுவாத கும்பலுக்கு ஒக்டோபர் புரட்சி விழாவைக் கொண்டாடும் உரிமை கிடையாது எனவும் ஒக்டோபர் புரட்சியின் பாடங்களை எமது நாட்டு வாலிபர்களும் நன்கு கற்றுணர்ந்து எமது நாட்டிலும் ஓர் சோஷலிஸ சமுதாய அமைப்பை ஏற்படுத்த முன்வரவேண்டும் எனவும் கூறினர்.

மற்றும் பல வாலிப சங்க அங்கத்தவர்களும் பேசினர்.

---

8-ம் பக்கத் தொடர்

## மா சே-துங் ....

திரிபுவாதத்திற்கும் இடையில் அறுதியான எல்லையை மக்களால் வரைந்துகொள்ள மேலும் நன்ருக முடிகிறது. மனிதர்கள், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் புழக்கடையில் உள்ள சாணக் குவியலைத் திரும்பிப் பார்த்துக் குருஷ்சோவும் அவரைப் பின்பற்றுவோரும் விலைகூற முயன்ற பழைய சரக்குகளைக் காணும்போது, அவர்களால் இப்போது நறும் பூக்களை நச்சுப் பூண்டுகளிலிருந்து மேலும் தெளிவாகப் பிரித்தறிய—ஒக்டோபர் புரட்சியின் பாதையை அதற்கு முரணுகச் செல்லும் பாதையிலிருந்து மேலும் தெளிவாகப் பிரித்தறிய முடிகிறது. ''முழு மக்களினதும் கட்சி'' ''முழு மக்களினதும் அரசு'' என்று கூச்சலிட்டுக் கொண்டு தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் காற்ருேடு போகவிட்டுள்ள குருஷ்சோவ் திரிபுவாதக் கோமாளிகள் ''சகல துறையிலும் கம்யூனிஸ நிர்மாணம்'' என்ற பெயர்ப் பலகையால் மக்களை ஏமாற்றுவது வரவரக் கடினமாகி வருவதைக் காண்கின்றனர். மார்க்சிஸப் போர்வை உடுத்திய பாராளுமன்ற வக்கிர புத்திகள் தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற ஆயுதமேந்தி எழுவதைத் தடுப்பது வரவரக் கடினமாகி வருவதைக் காண்கின்றனர்.

### சீனப் புரட்சி ஒக்டோபர் புரட்சியின் தொடர்ச்சியே

உலகம் இப்பொழுது மாசே-துங்கின் சிந்தனையைப் பெரும் துவஜமாகக் கொண்ட ஒரு புரட்சிகரமான புதிய சகாப்தத்தில் பிரவேசித்துள்ளது. 18-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் பிரான்ஸ் புரட்சியின் மையமாக இருந்தது; 19-ம் நூற்ருண்டின் நடுப்பகுதியில் தொழிலாளி வர்க்கம் அரசியல் அரங்கில் பிரவேசித்து மார்க்சிஸம் தோன்றியபோது, புரட்சிகர மையம் ஜெர்மனிக்கு நகர்ந்தது. 20-ம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் அது ருஷ்யாவுக்கு நகர்ந்தது; லெனினிஸம் தோன்றியது. அதன்பின் உலகப் புரட்சியின் மையம் சிறிது சிறிதாகச் சீனவுக்கு நகர்ந்துள்ளது; மா சே-துங்கின் சிந்தனையும் தோன்றியுள்ளது. மகத்தான தொழிலாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் மூலம் உலகப் புரட்சியின் மையமான சீன மேலும் சக்தி மிக்கதாயும், ஸ்திரப்பட்டும் உள்ளது.

தலைவர் மாஓ கூறுகிறர்: ''சீன மக்கள் எப்போதும் சீனப் புரட்சியை மகத்தான ஒக்டோபர் புரட்சியின் ஒரு தொடர்ச்சியாகவும், இதனை ஒரு பெரும் கௌரவமாகவும் கருதி வருகின்றனர்.'' நாம் தற்போது ஈடுபட்டுள்ள மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி சரியாக—ஓர் உயர்ந்த கட்டத்தில் வரலாற்று ரீதியான புதிய சூழ்நிலைகளின்கீழ்— ஒக்டோபர் புரட்சியின் தொடர்ச்சியே. சீன மக்கள் இன்று ஒக்டோபர் புரட்சியின் 50-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் மிகச் சிறந்த முறை, ஒக்டோபர் புரட்சியின் உன்னதத் துவஜத்தையும் மார்க்சிஸ-லெனினிஸமாகிய மா சே-துங்கின் சிந்தனையாகிய உன்னதத் துவஜத்தையும் உயர்த்திப் பிடிப்பதும், மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியை உறுதியுடன் இறுதிவரை நடத்தி முடிப்பதும், உலகின் சகல புரட்சிகர மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகளையும் எல்லா நாடுகளினதும் மக்களையும் உறுதியாக ஆதரிப்பதும், அவர்களோடு சேர்ந்து ஏகாதிபத்தியத்திற்கும, நவீன திரிபுவாதத்திற்கும் எல்லாப் பிற்போக்குக்கும் எதிரான போராட்டத்தை இறுதிவரை நடத்திமுடிப்பதும்தான்.

### புரட்சி வென்றே தீரும்

ஒக்டோபர் புரட்சியின் 40-வது ஆண்டு நிறைவை நினைவு கூருகையில் தோழர் மா சே-துங் சுட்டிக் காட்டினர்: ''சோஷலிஸ அமைப்பு இறுதியில் முதலாளித்துவ அமைப்பை அகற்றி அதனிடத்தை எடுக்கும்; இது மனித விருப்பில் தங்கியில்லாத ஒரு புற நிலையான நியதி. வரலாற்றுச் சக்கரத்தை இழுத்துப் பிடிக்க பிற்போக்குவாதிகள் எவ்வளவுதான் முயன்றபோதிலும் இன்ருே, நாளையோ புரட்சி நடக்கவே செய்யும்; தவிர்க்க முடியாதபடி வென்றே தீரும்.''

1962-ல் தோழர் மா சே-துங் கூறினர்: ''சோவியத் யூனியனே முதலாவது சோஷலிஸ அரசு; சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி லெனினல் ஸ்தாபிக்கப்பட்டது. சோவியத் கட்சியினதும், அரசினதும் தலைமை இப்பொழுது திரிபுவாதிகளால் கவர்ந்து கொள்ளப்பட்டுள்ளதெனினும், சோவியத் வெகுஜனங்களும் கட்சி அங்கத்தினர்களும் ஊழியர்களும் சிறந்தவர்கள். அவர்கள் புரட்சியை விரும்புகின்றனர் என்பதும், திரிபுவாதத்தின் ஆட்சி நெடுங்காலம் நீடிக்காது என்பதுமான நம்பிக்கையில் உறுதியாயிருங்கள் எனத் தோழர்களுக்கு நான் அறிவுறுத்துகிறேன்''

சோவியத் யூனியனில் சகல துறைகளிலும் முதலாளித்துவம் திரும்பப் புகுத்தப்படுவது சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தின் வரலாற்றில் ஒரு குறுகிய கால சம்பவம் மட்டுமே. உன்னத லெனினலும் ஸ்டாலினலும் கற்பிக்கப்பட்டவர்களும், ஒக்டோபர் புரட்சியின் புகழ்செறிந்தபாரம்பரியத்தை உடையவர்களும், பாசிஸ விரோத யுத்தத்தில் சோதனையிலிடப்பட்ட— புடமிடப்பட்டவர்களுமான உண்மையான சோவியத் கம்யூனிஸ்டுகளும் சோவியத் மக்களும் தம்மீது தறிகெட்டு மிதித்துத் துவைத்துத் தாண்டவமாடும் சோவியத் திரிபுவாதிகளின் துரோகக் கும்பலை அதிக காலம் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என நாம் திட நம்பிக்கை கொண்டுள்ளோம். அவர்கள் நிச்சயமாக மகத்தான ஒக்டோபர் புரட்சியின் துவஜத்தின்கீழ் ஐக்கியப்படுவர்; நீண்ட போராட்டத்தில் தளராது இருப்பர்; கடும் இருளிலிருந்து வெளிப்பட்டு ஒக்டோபர் புரட்சியின் செந்தாரகையை மீண்டும் பிரகாசிக்க—மேலும் அதிக ஒளியுடன் பிரகாசிக்கச் செய்வர்.

### இறுதி வெற்றி கம்யூனிஸத்திற்கே

மார்க்சிஸ—லெனினிஸமாகிய, மா சே-துங் சிந்தனையாகிய பெரும் உண்மை எதிர் நிற்காதது. உலகின் ஜனத்தொகையில் 90 விகிதத்திற்கு மேற்பட்டோர் தவருது எப்போதும் புரட்சிக்கு ஆதரவானவர்கள். வெகுஜனங்கள் இறுதியில் வெற்றியீட்டுவர். உலகப் புரட்சி இறுதியில் வெற்றியீட்டும். ஒக்டோபர் புரட்சி முன்னின்று வழி துலக்கிய தொழிலாளி வர்க்க சர்வாதிகார இலட்சியம் மாசே-துங்கின் சிந்தனையாகிய மாபெரும் புரட்சிகர துவஜத்தின் கீழ் நிச்சயமாக மேலும் பிரமாண்டமான அடிகள் எடுத்துவைத்து முன்னேறும்; கம்யூனிஸம் நிச்சயமாக உலகெங்கனும் இறுதி வெற்றி ஈட்டும்

---

# காக்கிச் சட்டை காடைத்தனம்

கொலை! மரணம்!

நாட்டிலேயா என்று கேட்கிறீர்களா?

இல்லை நாற்ற மடிக்கும் முதலாளித்துவ சமுதாயத்தில் அதுதான் நாள்தோறும் கேட்கின்ற கதையாச்சே.

நாம் இங்கு குறிப்பிடுவது அதையல்ல. பதிலாக நாட்டிலே குற்றம் செய்பவர்களைக் கண்டுபிடித்து தண்டிப்பதற்கு உதவி புரிய என முதலாளித்துவ ஆட்சியாளர்கள் உருவாக்கியுள்ளார்களே பொலிஸ் படை, அவர்கள்தான் இதைச் செய்கின்ருர்கள். ஒன்ரு, இரண்டா. இல்லை. அதற்கு, அவர்களின் அட்டகாசத்திற்கு, கொலைகார தனத்திற்கு அளவே கிடையாது. தொடம்பே முதலாளி தொட்டு அண்மையில் மாண்ட பொன்சேகா வரை பொலிஸ் வேட்டை நாய்களின் கைகளிலே அகப்பட்டுக் காலனுக்கு இரையானேரின் தொகை கணக்கிலடங்காது.

அண்மையில் ஒரு வாலிபன் இன்பக் கோபுரத்தின் வாயிலிலே நின்ற இளம் மனைவி கதறிக் கண்ணீர் வடிக்க தன் இன்னுயிரை இந்தக் கொலைகார பொலிஸ் கூட்டத்தின் வெறியாட்டத்திற்குப் பலி கொடுத்த பரிதாப வரலாறு இன்னும் மறையவில்லை.

அதற்கிடையிலே இதோ மற்ருெமொரு வாலிபன், 19 வயது நிரம்பிய கட்டிழம் காளை பொலிசாரின் கைகளிலே சிக்குண்டு மாண்டு விட்டான்.

அண்மையில் கல்கிசை பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்ட பொன்சேகா மரணமானது பற்றி தான் குறிப்பிடுகிருேம்.

அந்த மரணம் சம்பந்தமாக விசாரணை செய்த நீதிபதியோ இது பற்றி மேல் நடவடிக்கை எடுக்கும்படி அட்டணி ஜெனரலுக்கு அறிவித்துள்ளார். அது பற்றி சாட்சியமளித்த டாக்டரோ அடியாலும், விழுந்ததாலும், இழுபட்டதாலும் காயங்கள் ஏற்பட்டதாக கூறியுள்ளார். சாட்சியமளித்த பொது மக்களோ பொலிசார் பொன்சேகாவைத் தாக்குவதைத் தாம் கண்டதாக கூறியுள்ளளர்.

நீதியைப் பாதுகாக்க உதவி செய்பவர்கள் என அழைக்கப்படும் பொலிசாரின் கைகளிலே சிக்குண்டு சித்திரவதைப் படுவோரின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. சிலர் இது பற்றி மேலிடத்திற்கு புகார் செய்கிருர்கள், பலர் பயத்திலே பேசாதிருக்கிருர்கள். ஆனல் வேலியே பயிரை மேய்கின்ற இந்த நீசத்தனம் நீடித்தால் நிச்சயமாக பாமர மக்கள் பார்த்திருக்கப் போவது கிடையாது.

இந்த விதமாக கேட்பாரற்ற முறையில் காடைத்தனம் புரிகின்ற காக்கிச் சட்டைப் போக்கிரிகளுக்கு புத்தி புகட்ட பொது மக்கள் தயங்க மாட்டார்கள் இது நிச்சயம்.

முதலாளித்துவ சட்டப்படி கூட தற்பாதுகாப்புக்காக எதிர் தாக்குதல் நடத்துவது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதல்லவா?

# சமசமாஜிகளும் சோவியத் யூனியனும்

சோவியத் யூனியன் பற்றி சமசமாஜக் கட்சி தனது அப்பிராயத்தை மாற்றிக் கொண்டது உள்நாட்டு அரசியலில் ஏற்பட்ட ஓர் குறிப்பிடத்தக்க குத்துக்கரணமாகும். ஒரு காலத்தில் சோவியத் யூனியன் ஸ்டாலின் தலைமையில் இருந்த போது "சோவியத் யூனியன்" ஸ்டாலின் என்ற வார்த்தைகளே சமசமாஜக் கட்சிக்கும் அதன் டிரொட்ஸ்கியத் தலைவர்கட்கும் நஞ்சாக இருந்தது.

சமசமாஜத் தலைவர்கள் தமது கட்சியில் புதிதாகச் சேரும் அங்கத்தவர்கட்கும், கட்சி ஊழியர்கட்கும் நடத்திய சகல அரசியல் வகுப்புக்களிலும் சோவியத் யூனியனைக் காரசாரமாகத் தாக்குவதில் ஆரம்பித்து கடினமான கண்டனத்துடன் முடித்து வந்தனர். ஸ்டாலினுக்கு எதிராக அவர்கள் நடத்திய சிந்தனைத் திணிப்பு எவ்வளவு தூரம் இருந்ததென்றால், அந்த வகுப்புக்களில் கலந்து கொண்ட சமசமாஜிகள் இன்று, ஸ்டாலின் இறந்து பல காலம் சென்ற பின்னும் அந்த வெறுப்புணர்ச்சியிலிருந்து விடுபடவில்லை. கடந்த யுத்தத்தின் போது சமசமாஜத் தலைவர்கள் யப்பானிய பாசிஸ்டுகளின் ஏஜண்டுகள் என்று பீட்டர் கெனமன் தாக்கியதை அவர்கள் மன்னித்து மறந்துவிட்டனர். கெனமன் திரிபுவாதக் கும்பலுடன் கோட்பாடற்ற முறையில் சந்தர்ப்பவாதக் கூட்டுச் சேர்ந்தும் விட்டனர். ஆனால் அவர்கள் ஸ்டாலின் மேல் கொண்ட வெறுப்பை மட்டும் மறக்கவில்லை.

## சோவியத் யூனியனின் வீழ்ச்சியை எதிர்பார்த்தனர்

ஸ்டாலின், லெனினுடைய கடமைகளைத் தொடர்ந்து செய்த காலங்களில், முதலாளித்துவ நாடுகளினால் சூழப்பட்டு, உள்ளும் புறமும் பல இடையூறுகளுக்கு மத்தியில் தனியொரு நாட்டில் சோஷலிஸத்தைக் கட்டி வளர்க்கையில் ஸ்டாலின் தலைமை தாங்கிய போது, ஹிட்லரின் ஆக்கிரமிப்பைத் தோற்கடிக்க சோவியத் மக்களை வெற்றிப் பாதையில் இட்டுச் சென்ற போது சமசமாஜக் கட்சியில் டிரொட்ஸ்கியத் தலைவர்களுக்கு ஸ்டாலினையும், சோவியத் யூனியனையும் திட்டுவதற்குப் போதியளவு வார்த்தைகள் கிடைக்கவில்லை.

ஸ்டாலின் ருஷ்யப் புரட்சியையும் உலகப் புரட்சியையும் காட்டிக் கொடுத்து விட்டார் என்றனர். சோவியத் யூனியன் சீரழிந்து வரும் தொழிலாளர் ஆட்சி என்றும் அது விரைவில் அழிந்துவிடும் என்றும் வாயில் வந்தபடியெல்லாம் பிதற்றினர். சோவியத் யூனியனை ஹிட்லர் தாக்கிய ஆரம்ப காலங்களில் சில மாதங்களில் சோவியத் யூனியன் வீழ்ந்து விடும் என இழிச்ச வாய்த்தனமாக் கூறினர். அதனை எதிர்பார்த்து ஏமாற்றமும் அடைந்தனர்.

சீன மக்கள் விடுதலைப்படை வெற்றிகரமாக முன்னேறி யாங்ஸ்சி நதியின் வடகரையை வந்தடைந்த போது, தென் பகுதியில் சியங்காய் ஷெக் கொள்ளைக்காரப் படைகள் காவல் நிற்கையில், நதியைக் கடப்பதற்குச் சற்றுத் தாமதிக்கையில், டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா வங்காளப் பத்திரிகை ஒன்றில் ஓர் "அறிவாற்றல் மிகுந்த" கட்டுரை ஒன்றை வெளியிட்டார். அக்கட்டுரையில் சீன மக்கள் விடுதலைச் சேனை இனிமேல் முன்னேறிச் செல்லாது என்றும், ஸ்டாலினும் அமெரிக்க ஜனாதிபதி டிறூமனும் தென் சீனாவைப் பொறுத்து உடன்படிக்கைக்கு வந்து விடுவர் என யூகம் கூறினார். ஏகாதிபத்தியத்தின் அசைக்க முடியாத எதிரியும், உலகம் பூராவிலும் உள்ள ஏகாதிபத்திய வாதிகளினாலும், பிற்போக்கு வாதிகளாலும் மிகவும் வெறுக்கப்பட்டவருமான ஸ்டாலின் மீது சமசமாஜிகள் காறித்துப்பிய வெறுப்பு அவ்வளவாக இருந்தது. மகத்தான ஸ்டாலினின் பெருமையை அழிக்கும் முயற்சியில் ஏகாதிபத்திய வாதிகளும், பிற்போக்குவாதிகளும் இன்றும் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் ஸ்டாலின் மரணமடைந்ததன் பின் நவீன திரிபுவாதிகளின் தலைமையில் சோவியத் யூனியன் நிறம் மாறியது; திசை மாறியது புரட்சிகர நோக்கங்களைக் கைவிட்டது. சமாதான சகஜீவனம், சமாதான பரிவர்த்தனை என்றெல்லாம் பிதற்றுகிறது. உலகப் புரட்சியின் நோக்கத்தையே கைவிட்டு, அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் வெளிப்படையாகவே ஒத்துழைக்கின்றது. முதலாளித்துவத்தை வெளிப்படையாக மறுபடியும் புகுத்துகிறது. இந்த நிலையில் சமசமாஜத் தலைவர்கள் சோவியத் யூனியனைப் போற்றிப் புகழ்கின்றனர். சோவியத் யூனியனின் திரிபுவாத தலைமை ஆட்சிக் கும்பலுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புகின்றனர். இன்றைய சோவியத் தலைவர்களைப் புகழ்ந்து பாடி உள்நாட்டு திரிபுவாதிகளின் கூட்டங்களில் பேசுகின்றனர். 50-வது ஆண்டு விழாவிற்கு தமது கட்சித் தலைவர்களை மொஸ்கோவுக்கு அனுப்புகின்றனர்.

## அன்று தூற்றியவர்கள் இன்று போற்றுவது ஏன்?

பார்ப்பதற்கு இந்த முகமாற்றம் புரிய முடியாததாய் இருக்கலாம். ஆனால் அதற்கு ஓர் தர்க்க ரீதியான காரணமும் இருக்கின்றது. இந்த டிறெட்ஸ்கிய தலைவர்கள் புரட்சிகரக் கோஷங்களை கத்தித் திரிந்தபோதிலும் எப்போதும் புரட்சியை எதிர்த்து வந்தவர்கள். அவர்களது உரத்த கூச்சல்கள் எல்லாம் தமது எதிர்ப் புரட்சி நோக்கங்களை மறைப்பதற்கு போடப்பட்ட திரைதான். ஆதலால்தான், சோவியத் யூனியன் ஸ்டாலின் தலைமையில் புரட்சிகரப் பாதையில் சென்றபோது, உலகப் பிற்போக்காளர்களுடன் சேர்ந்து அதனைத் தாக்கினர். இன்று நவீன திரிபுவாதிகளின் தலைமையில், சோவியத் யூனியன் எதிர்ப்புரட்சிப் பாதையில் செல்கிறது. இப்போது உலக பிற்போக்குவாதிகளுடன் சேர்ந்து சோவியத் யூனியனுக்குப் புகழ்பாடுகின்றனர். திரிபுவாத ருஷ்யாவிற்குப் புகழ் பாடும் இவர்கள், அண்மையில் புரட்சிகரச் சீனமீது, யூ. என். பி. பிற்போக்கு வாதிகள் சீன விரோத இயக்கம் தொடுத்த போது பாராளுமன்றத்தில் சீனாவுக்காதரவாக ஒரு வார்த்தையேனும் பேசவில்லை என்பதை எவராலும் மறுக்க முடியாது. இந்தப் புரட்சிகரக் கடமையை நிறைவேற்றியவர் கம்பஹ எம். பி. எஸ். டி. பண்டாரநாயக்க.

### அர்த்தமற்ற அறைகூவல்

உண்மையாதெனில், வெகு காலத்திற்கு முன்பே ஸ்டாலின் சுட்டிக்காட்டியபடி டிரொட்ஸ்கியவாதமும் அல்லது இடதுசாரி சந்தர்ப்பவாதமும், நவீன திரிபுவாதமும், அல்லது வலதுசாரி சீர்திருத்தவாதமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களேயாகும். இதனால்தான் சமசமாஜத் தலைவர்கட்கு இந்தக் கரணம் அடிப்பதில் கஷ்டம் ஏதும் இருக்கவில்லை.

சமசமாஜக் கட்சியிலிருந்து விலகிய சமசமாஜ (பு)வைப் பொறுத்தவரையிலும் இதுதான் உண்மை. இந்த (பு) என்ற வாலை ஒட்டிக்கொண்டிருந்தபோதிலும் இவர்களும் முந்தியைப்போல் சோவியத் யூனியனைத் தூற்றுவது கிடையாது. இவர்கள் இன்னும் ஒரு படி சென்று புரட்சிகரச் சீனாவையும், திரிபுவாத ருஷ்யாவையும் ஒரு தராசில் வைத்து வியட்நாமுக்கு ஆதரவாக இருவரையும் ஐக்கியப்படும்படி கூற முன்வந்துள்ளனர். அக்டோபர் 21-ம் திகதி வியட்நாமுக்கு ஆதரவாக நடந்த கூட்டத்தில், கொல்வின் ஆர். டி. சில்வாவும், எட்மன் சமரக்கொடியும் சேர்ந்தாற் போல் இந்த அர்த்தமற்ற அறைகூவலை விடுத்தனர்

இந்தியா, பர்மா, இலங்கை பொல்ஷவிக் லெனினிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்கள் (ஏனைய நாடுகளை எதற்காக விட்டுவைத்தார்களோ தெரியாது.) இலங்கையில் மட்டுமல்லாது இந்தியாவிலும் பர்மாவிலும், புரட்சிக்குத் தலைமைதாங்க முன்வந்தவர்கள், பாராளுமன்ற முறையின் சமாதான பக்தர்களாக வென்றெடுக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் இன்று எதிர்ப் புரட்சியாளர்களின் மக்காவான மொஸ்கோவிற்குப் பாதபூஜை செய்யும் நிலைக்கும் ஆளாகியுள்ளனர். காலம் என்னும் சுழல்காற்று கபடர்களின் சுயரூபத்தை அம்பலப் படுத்தும். ஆனால் இதுவே மிகவும் சிரிப்புக்கிடமான நிகழ்ச்சி.

# உலகப் புரட்சியின் மாபெரும் ஒளி....

6—-ம் பக்கத் தொடர்

சிந்தனையின் வழிகாட்டலின் கீழ் நடத்தப்படுகிறது. இதன் வெற்றி, சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சீன மக்களுக்கும் எப்போதும் சரியான ஒரே பாதையைக் காட்டியும் அவர்களை வெற்றிக்கு மேல் வெற்றிக்கு வழி நடத்தியும் வந்துள்ள மா சே-துங்கின் சிந்தனையின் மாபெரும் வெற்றியாகும். மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி மா சே-துங்கின் சிந்தனையை ஜீவனுள்ளதாகக் கற்றுப் பிரயோகிப்பதற்கான வெகுஜன இயக்கத்தில் புதிய பெரும் எழுச்சியொன்றை ஏற்படுத்தி, இந்த இயக்கத்தைப் புதிய, மேலும் உயர்ந்த ஒரு கட்டத்திற்கு உயர்த்தியுள்ளது. இன்று மக்கள் சீனம் மார்க்சிஸ லெனினிஸத்தின் ஒரு மாபெரும் பாடசாலையாக ஆகியுள்ளது. இங்கு மார்க்சிஸ—லெனினிஸம், மாஓ சே-துங்கின் சிந்தனை, கோடானு கோடி மக்களின் ஆத்மீக உணவாகவே ஆகிவிட்டது. அது மக்களின் வாழ்வில் ஒவ்வொரு செய்கைக்கும் போதனையூட்டியும் ஊக்கம் தந்தும் வருகிறது.

### தோழர் மா ஓ வின் அறை கூவல்

தோழர் மாஓ சே-துங்கின் மார்க்சிஸ-லெனினிஸ சிந்தனையைச் சீனாவின் எழுபது கோடி மக்கள் தேர்ந்துகொள்வது, ஒரு கால் வெகுஜனங்கள் தத்துவத்தைத் தேர்ந்து கொண்டதும் அது தோற்கடிக்க முடியாத ஒரு லௌகீக சக்தியாகிறது என்ற மார்க்ஸின் தத்துவத்திற்கு ஓர் உன்னதமான, ஜீவனுள்ள உதாரணமும் சிறந்து விளங்கும் நிரூபணமுமாகும்.

மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி மக்கள் தத்துவார்த்த ரீதியில் புரட்சிகரமயப்படுவதற்கு உதவி, அவர்களின் அரசியல் அறிவுணர்வையும் புரட்சிகர உணர்வையும் உயர்த்தி, உற்பத்தி சக்திகள், பொருளாதாரம், மக்களின் கலாசாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் மேற்கொண்ட துரித அபிவிருத்தியையும் மேம்படுத்தியும், தொடர்ந்தும் மேம்படுத்தியும் வருகிறது. தேசம் முழுவதும் "புரட்சியை பற்றிக் கொள்ளுங்கள், உற்பத்தியை தூண்டி விடுங்கள்" என்ற தலைவர் மா ஓவின் அறைகூவலையும் சுய ஆதாரமும் தொழிலாளி வர்க்க அரசியலைத் தலைமையிலிடுவதுமான கொள்கைகளையும் நிறைவேற்றியும், சோஷலிஸத்தைக் கட்டியெழுப்புவதில் மேலும் பெரிய, துரிதமான, சிறப்பான, சிக்கனமான பயன்களை ஈட்டுவதில் கட்சியின் பொது நெறியை அமுல்படுத்தியும், வர்க்கப் போராட்டமும் உற்பத்திக்கான போராட்டமும் விஞ்ஞான பரிசோதனையுமாகிய மூன்று பெரும் புரட்சிகர இயக்கங்களை வெற்றிகரமாக நடத்தியும் வருகிறது. ராசிஸ் எண்ணெய்த் தொழிலாளர்களினதும் ராசாம் உற்பத்திப் பிரிவினதும் மக்கள் விடுதலைச் சேனையினதும் உதாரணங்கள் தொழிலாளி வர்க்கத்தையும் உழைக்கும் விவசாயிகளையும் முழு மக்களையும் புரட்சியைத் தொடர்ந்து நடத்தவும் புதிய சோஷலிஸ சீனா ஒன்றைக்கட்டியெழுப்பவும் ஊக்குவிக்கிறது. தற்போதைய "சேனையை ஆதரிப்பதும் மக்களைப் பேணுவது" மான இயக்கம் மக்கள் விடுதலைச் சேனையிடமிருந்து கற்பதும் மக்கள் விடுதலைச் சேனையைப் பூரணமாக ஆதரிப்பதுமான மற்றொரு மிக முக்கியமான இயக்கமாகும். இதற்குக் காரணம், மக்கள் விடுதலைச் சேனை மா சே-துங்கின் புரட்சிகர நெறிக்கு விசுவாசமாக உள்ளதான, சீன புரட்சிகர மக்களின் ஒரு சேனை என்பதாகும். அதுவே எல்லா விரோதிகளையும் அடக்குவதற்கான தொழிலாளி வர்க்கத்தின் பிரதான கருவியும், மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் கொத்தளமும், சீன மக்களின் வரலாற்று முக்கியத்துவமிக்க வெற்றிக்கு நம்பகமான உத்தரவாதமுமாகும்.

—11-ம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாணச் சிறைச்சாலையின் சீர்கேடுகள்

அன்புள்ள ஆசிரியருக்கு

அண்மையில் யாழ் பொலிசாரினல் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அரசாங்க விருந்தினராக சில நாட்கள் தங்க வேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டது. அப்பொழுது அந்தச் சிறைச்சாலையில் நிலவுகின்ற பல சீர்கேட்டை கண்கூடாகக் காண்கின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதைப் பற்றி உங்கள் பத்திரிகையின் மூலம் நாட்டு மக்களின், அரசாங்க அதிகாரிகளின் கவனத்தைப் பெறுவது நல்லது என நம்புகிறேன்.

விளக்க மறியலில் இருந்தவன் என்ற காரணத்தினல் அந்தப் பகுதியில் நிலவுகின்ற தன்மை பற்றியே முக்கியமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

விளக்க மறியலில் உள்ளவர்கள் எல்லோரும் குற்றம் செய்தவர்கள் அல்ல. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் தான் பெரும்பாலும் அங்கு உள்ளனர். குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனைக்காகக் காத்திருப்பவர்கள் ஒருசிலரே.

இந்த நிலையில் அங்கு உள்ள மனிதர்கள் வாழும் நிலை மிகவும் மோசமானதாக உள்ளது. 4 தனி அறைகளைத் தவிர வேறு இரு மண்டபங்கள் அங்கு உள்ளன. அதில் ஒரு மண்டபத்தில் 56 பேருக்கு மேல் உள்ளனர். இரவில் தூங்கும்போது ஒருவரின் கால் மற்றவரின் உடலுக்குமேல் படவேண்டிய அளவு இட நெருக்கடி உள்ளது. அதன் காரணமாக பெரும்பாலும் கூனிக் குறுகியே படுக்க வேண்டிய நிலை அங்கு நிலவுகிறது. இந்த நிலையில் அந்த மண்டபத்தில் கணிசமான பகுதி தண்ணீர் பாத்திரங்கள் வைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றை எல்லாம் விட 56 பேருக்கும் இரண்டே இரண்டு மலம் கழிக்கும் இடம் (வாளி) தான் உள்ளது. அதன் காரணமாக அங்கு மோசமான துர்நாற்றமும் அருவருக்கத் தக்க தன்மையும் நிலவுகிறது.

இத்துடன் 20 வயதுக்குக் குறைந்த இளைஞர்கள் பலரும் அங்கு உள்ளனர். பல முறை குற்றம் செய்தவர்களுடனும், பெரும் குற்றச்சாட்டின் பேரில் அங்கு உள்ளவர்களுடனும் இவ் இளைஞர்கள் பழகுவதற்கு அங்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அதன் காரணமாக பல துர்நடத்தைகளுக்கும் அவர்கள் உள்ளாவதாக அறிய முடிந்தது. தற்செயலாக குற்றம் செய்தவர்களையும் திருத்துவதாக இருக்க வேண்டிய சிறைச்சாலை பல புதிய குற்றங்களைச் செய்யத் தூண்டுகின்ற இடமாக அமைவதையும் காண முடிந்தது.

இத்துடன் சில அதிகாரிகள் கைதிகளை மனிதர்களாக எண்ணுவதாகத் தெரியவில்லை. கடுமையான வார்த்தைப் பதங்களைப் பாவித்து தமது (போலி) அதிகாரத்தைக் காட்ட முனைகின்றனர்.

இந்த விதமான சீர்கேடுகள் என்று தான் மறையுமோ?

இப்படிக்கு
மாஜி சிறை விருந்தினன்

# ஹிட்லரை நினைவுதரும் மேற்கு ஜேர்மன் தூதுவர்

ஹிட்லரின் கொலைக் கொடூர நாசத் தடிக்கின்ற மேற்கு ஜேர்மன் தூதுவர் தனது நாட்டு அதிபர் கிசிங்கர் இந்த நாட்டுக்கு விஜயம் செய்ய விருப்பதையொட்டி விசேஷமான பல வேலைகளைச் செய்வதில் இறங்கியுள்ளார்.

கிசிங்கருக்காக இத்தூதுவர் செய்ய முனைகின்ற பிரச்சாரம் ஹிட்லரின் பிரச்சார பகுதி தலைவரான கொபல்லை எமக்கு ஞாபக மூட்டுகிறது. கைப்பற்றப்பட்ட இடங்களில் ஹிட்லரின் நாஜிட்டுகள் சில கருங்காலிகளை விலைக்கு வாங்கினர். அவர்கள் மூலம் ஹிட்லரைப் பற்றி புகழ் பாட வைத்தனர். ஆனல் நாஜிகளின் தோல்விக்குப் பின் அவ்வித கருங்காலிகள் தமது உயிரையே இழக்க வேண்டி ஏற்பட்டது.

இப்பொழுது மேற்கு ஜேர்மன் தூதுவர் செய்ய முற்பட்டுள்ள பிரச்சார வேலைகளும் அன்றைய நாஜிகளின் ஞாபகத்தையே நினைவூட்டுகின்றன.

கிசங்கரின் விஜயத்தை ஒட்டி செய்யப்பட்ட பிரச்சார வேலைகளில் ஒன்று தான் இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் என்ற பெயரிலே இரண்டு விருந்து நடத்தப்பட்டமை, அதுவும் இரண்டு நாட்களுக்கு இடையில். காட்டப்பட்ட காரணம் என்னவெனில் ஜேர்மன் பத்திரிகை ஒன்றின் உதவி ஆசிரியருக்கு வரவேற்பு. இரண்டு விருந்துக்கும் இரு வேறு பெயர்கள். ஒன்று இரவு போசனம் மற்றது சாப்பாடு இரண்டும் ஒரே ஹோட்டலில் தான் நடைபெற்றுள்ளது.

ஒரு பத்திரிகையாளர் கூட இதற்கு ஒரு சதம் கூட கொடுக்கவில்லையாம். அப்படியானல் இச் செலவுகளுக்கு பணம் கொடுத்தது யார். போதுமான அளவு குடிவகையும் புகைபானவகைகளும் இருந்தனவாம்.

இது பற்றி எமது வெளிவிவகார அமைச்சு விசாரிக்குமா? பாதம் தாங்கிகள் எங்கே செய்வார்கள்.

# கூ. மொ. வி....

4- ம்பக்கத் தொடர்

கொண்டிருந்த காலத்தில் முதன் முறையாக உலக வங்கி புத்திமதி கூறவும் நிலைமையைக் கணக்கெடுக்கவும் வந்தது. அப்பொழுது தயாரித்த அறிக்கையில் விவசாய நாடான இலங்கை கைத்தொழில் துறையை நினைத்தும் பார்க்கலாகாது என்றும், அது விவேகமற்றதெனின் முயற்சி என்றும் கூறியது. ஆனல் பாராளு மன்றத்தில் ஏற்பட்ட பதவி மாற்றத்தைத் தொடர்ந்தும், தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் உடன் நிகழ்ச்சியாகவும் முந்திய அரசாங்க காலத்தில் எத்தனையோ சிறு பொருட்கள் இங்கு செய்யப்படலாயின. இவை பெரும்பாலும் தனிப்பட்ட முதலாளிகளினல் உற்பத்தி செய்யப்பட்டாலும் சிற் சில கூட்டுத்தாபனங்களும், அரசாங்கத் துறை நிறுவனங்களும் தாபிக்கப்பட்டன. இது வரலாறு கண்ட புறநிலை நிகழ்ச்சிகளாகிவிட்டன. இப்பொழுது வந்துள்ள உலக வங்கிக் குழு பழைய பல்லவி பாட முடியாது, எனவே, கைத் தொழில் வளர்ச்சி வேண்டும் என்றும், ஆனல் அது திறமையாக இயங்க வேண்டுமாயின் தனியார் துறையில் இருக்க வேண்டும் என்றும் கூறுகிறது. வரலாற்றை எப்பொழுதும் பின் போடவே அமெரிக்கா எப்பொழுதும் முயல்கிறது. லெனின் தலைமையில் வெற்றி பெற்ற மகத்தான ஒக்டோபர் புரட்சியைக் குழந்தைப் பருவத்திலேயே கழுத்தை நெரித்துக் கொன்றுவிடப் பார்த்த ''தலையீட்டு யுத்தம்'' முதல் இன்று மகத்தான சீன மக்களையும், நாட்டையும் கம்யூனிஸத்திலிருந்து விடுவிக்கப் பிரயத்தனம் செய்வது வரை எண்ணற்ற எதிர்ப் புரட்சி வேலைகளை ஆண்டாண்டு காலமாகச் செய்து பார்க்கிறது. ஆனல் வரலாறு எப்பொழுதும் ஒரு படி முன்னேறிச் செல்கிறது. அதுதான் மக்கள் சக்தியின் பெரும் ரகசியமாகும். இலங்கையில் இன்று அமெரிக்கா பல வழிகளில் நேரடியாகவே தலையிடுகிறது. பலமிழந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் ஸ்தானத்தைத் தான் வகிக்க முனைகிறது. அதன் கண்காணியும் அனுகோசுமான யூ. என். பி. யைத் தூக்கியெறிவதன் மூலம் மக்கள் தக்க பாடம் படிப்பித்தே தீருவர்.

நாம் முன்வைத்துள்ளதுடன் தமிழரசு குஞ்சுகளின் 'தந்தை' செல்வநாயகத்திற்கும் இது பற்றி தெரிவித்துள்ளோம்.

# உலகப் புரட்சியின் மாபெரு...

—10-ம் பக்கத் தொடர்

உன்னத சீனம் சோஷலிஸப் பாதை வழியே பெரும் அடிகள் எடுத்து வைத்து முன்னேறுகிறது. அது பெரும் பொருளாதார, ராணுவ பலங் கொண்டதும், வர வர அதிகரிக்கும் சர்வதேச நன் மதிப்பை அனுபவிப்பதுமான ஒரு சக்திமிக்கசோஷலிஸ அரசாகி வருகிறது. சீனவின் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் கைத் தொழிலும் எட்டியுள்ள மட்டம், அதன் அணு பரிசோதனை வெடிப்புகளிலும் அதன் ஏவாயுத அணு பரிசோதனையிலும் இவ்வருடத்தில் சமீபத்தில் அதன் முதலாவது ஜலவாயு குண்டு வெடிக்கப் பட்டதிலும் காணக் கூடியதாக உள்ளது. மக்கள் சீன அணு ஆயுதங்களையும் ஏவாயு தங்களையும் கைவரப் பெற்றமை சீன மக்களினதும் முழு உலகிலுமுள்ள பல்வேறு நாடுகளின் புரட்சிகர மக்களினதும் மற்றுமொரு மகத்தான வெற்றியாகும். அது ஏகாதிபத்தியத்திற்கும் நவீன திரிபுவாதத்திற்கும் எதிரான போராட்டத்திற்கும், தேசிய விடுதலைக்கும் சமூக ஈடேற்றத்திற்குமான போராட்டத்திற்கும் சக்தி மிக்க ஊக்கம் தருவதும் அவற்றை மேற்கொண்டு பலப்படுத்துவதுமாகும். அது எல்லா நாடுகளின் மக்களினதும் விரோதிக்கு மற்றுமொரு பலமான அடியாகும்! பயமுறுத்தாட்டலுக்கும் ஆக்கிரமிப்பிற்கும் கருவியாக உபயோகிக்கப்பட்ட ஏகாதிபத்தியவாதிகளினதும் திரிபுவாதிகளினதும் அணு, ஜலவாயு ஆயுத ஏகபோகம் தகர்க்கப்பட்டு விட்டது. 'அணு, ஆயுதங்கள் பரவுவதைத் தடுப்ப'' தற்கான அவர்களின் சதி தோல்வியடைந்துவிட்டது, சீனவை ''அடக்கி'' வைத்திருக்கும் அவர்களது திட்டமும் பொடியாக்கப்பட்டுவிட்டது.

சீன மக்களால் தமது மகத்தான தொழிலாளி வர்க்க கலாசாரப் புரட்சியிலும் தங்கள் சோஷலிஸ நிர்மாணத்திலும் தங்கள் தேசிய பாதுகாப்புப் பலத்தை அதிகரிப்பதிலும் ஈட்டப் பட்டுள்ள பல்வேறு சாதனைகளால் நாம் உளமாரப் பெரும் மகிழ்ச்சியடைகிறோம், உங்களுக்குச் சகல முனைகளிலும் இன்னும் புதிய, வர வரப் பெரிதான வெற்றிகள் எய்த வாழ்த்துகிறோம்.

# காங்கேசன் துறையை நகரசபை ஆக்காதே

காங்கேசன் துறையை நகர சபை யாக்க வேண்டாமென அண்மையில் அங்கு விசாரணைக்குச் சென்ற உள்ளூராட்சி மன்ற உப கமிஷனருக்கு அப்பகுதி மக்கள் பலரும் மகஜர் சமர்ப்பித்ததுடன், தமது அபிப்பிராயங்களையும் தெரிவித்தனர்.

இதுபற்றி மக்கள் மத்தியில் மேலும் தீவிர இயக்கம் நடத்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கேசன் துறைக் கிளை முடிவு செய்துள்ளதுடன் அது பற்றிய நடவடிக்கைகளை அக்கிளையின் செயலாளர் தோழர் ஆர். சூடாமணி மேற்கொண்டுள்ளார்.

# சுதந்திரனே உரிமை கொடு

தமிழரசு தம்பிரான்களின் ஊதுகுழலான 'சுதந்திரன்' பத்திரிகையில் வேலை செய்யும் சகல தொழிலாளர்களும் சி. டி. யு. எப். உடன் இணைந்துள்ள இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்துள்ளனர்.

தொழிலாளர்களுக்காக தாமும் பாடுபடுவதாக பிதற்றிக்கொண்டு காளான் சங்கங்களை ஏற்படுத்தி தொழிலாளர்களைப் பிளவுபடுத்தும் தமிழரசு தம்பிரான்களிடம் வேலை செய்யும் தொழிலாளர்களே தமது உரிமையைப் பெறுவதற்காக எம்முடைய சங்கத்தில் இணைய வேண்டி உள்ளது என்பதிலிருந்து இவர்கள் தொழிலாளருக்கு செய்கின்ற சேவைதெரிகிறதல்லவா?

இத் தொழிலாளர்களின் சார்பில் பல கோரிக்கைகளை

# முல்லைத்தீவு விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர்

முல்லைத்தீவுப் பகுதியில், அரசாங்கத்தினல், கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், வயல்களில் வளரும் களையை அழிப்பதற்கு பணம் வழங்கப்படுவதற்குப் பதிலாக அக்ரோசன் என்னும் களை கொல்லி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டது. விவசாயிகள் இக் களை கொல்லியை தங்கள் வயல்களில் பாவித்த பொழுது அவை பயனற்றதாகக்காணப் படுகின்றது.

விவசாயிகள் தங்களிடம் மீதமிருந்த அக்குரோசனை தங்கள் தங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எடுத்துச் சென்று வேறு களை கொல்லி தரும்படி கேட்ட பொழுது நிர்வாகத்தினல் வேறு களை கொல்லி கொடுக்க மறுக்கப் படுகின்றது.

கடந்த வருடங்களில் விவசாய இலாகாவே மேற்படி அக்ரோசனை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்தனர். அவை திருப்தியான பலனை அளித்தது.

இவ்வருடம் அரசாங்க விவசாயக் கடன் திட்டத்திற்கமைய கூட்டுறவுப் பகுதியினர் தங்களின் மொத்த தேவையை அதாவது கடன் பெற்றவர்களுக்கு கட்டாயமாகக் கொடுக்கப் படவேண்டிய அளவை பெறுவதற்கு கேள்விபத்திர விண்ணப்பம் மூலம் (Tender) தனியார் ஸ்தாபனங்களில் மொத்தமாகப் பெற்றனர்.

மேற்படி தனியார் ஸ்தாபனங்கள் அக்ரோசன் என்னும் களைகொல்லியைமொத்தமாக அதாவது 40 கலன் கொண்ட பீப்பாக்களாக இறக்குமதி செய்து பின்பு போத்தல்களில் அடைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்துள்ளது. இந்த முறையில் அக்ரோசன் கையாளப்பட்ட போதுதான் அக்ரோசனில் ஏதாவது கலப்படம் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று விவசாயிகள் கருதுகின்றனர். இப்பேர்ப்பட்ட தரக்குறைவான களை கொல்லியினல் நெல்வயல்களில் களை அகற்றப்படவில்லை.

விவசாயிகளிடம் களை கொல்லிக்கு விவசாயக் கடனிலிருந்து கழிக்கப்பட்ட பணத்தை விவசாயிகள் அநியாயமாக இழந்ததோடல்லாமலும், களை கொள்ளியை வயலில் தெளிப்பதற்கு தெளி கருவிக்கு (PUMP) வீணாக வாடகையைச் செலுத்தியதோடல்லாமலும், அந்தக் களை கொல்லியைத் தெளிபதற்குச் செலவான கூலிப் பணத்தையும் இழக்கின்றனர். மேலும் வயல்களில் களை அழிக்கும் பருவம் கடந்து விட்டது. இன்னும் சில நாட்களில் களை பூக்கும் பருவம் அடைந்துவிடும். அதன் பின் களை அழிப்பதில் பிரயோசனம் இல்லை. ஆகவே உடனடியாக அரசாங்கம் வேறு களை கொல்லியை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும்.

வயல்களில் களை அழிக்கப் படாவிட்டால் விவசாயிக்கு ஏற்படும் நஷ்டத்தை ஆராய வேண்டி இருக்கின்றது. களை அழியாத பட்சத்தில் அது ஒரு ஏக்கரின் முழு விளைச்சலை 10% தொடக்கம் 20% வரை குறைக்கின்றது. இரண்டாவதாக அறுவடைக் கூலியையும் 10% தொடக்கம் 20% வரை கூட்டுகின்றது. அதே போல சூடடிக்கும் போதும் வீணாகச் செலவு ஏற்படுகின்றது. ஆதலால் விவசாயிகளை மேற்படி கஷ்டங்களில் இருந்து காப்பாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## பொருளாதார ......

1—ம் பக்கத் தொடர்

பின் பேரில் அக்கூட்டத்திற்கு கொண்டுவரப்பட்டார். டட்லி தான் போனலும் தனது இடத்திற்கு ஜே. ஆரிலும் பார்க்க வேறு பலர் இருக்கிருர்கள் என்பதைத்தான் டட்லி அவ்விதம் ஜே. ஆருக்கு கூறியுள்ளார்.

இந்தக் கூற்று மற்றும் பல பிரச்சினைகளைக் கிளப்புகிறது. யாரையும், யு. என். பி. யின் உப தலைவரைக்கூட கலந்து கொள்ளாமல் சி. பி. டி. சில்வா (வேறு கட்சியைச் சேர்ந்தவர்) வுக்கு பிரதமர் பதவியை வழங்க டட்லிக்கு உரிமையிருந்ததா. இக்கேள்வி மேலும் விசேஷமாகிறது. ஏனெனில் காலம் சென்ற பண்டாரநாயக்கா தனக்கு சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஐ. நா. சபையில் ஓர் நிரந்தர ஸ்தானத்தை அளித்தார் எனவும் அவற்றையெல்லாம் யு. என். பி. விசுவாசியான டட்லி தான் நிராகரித்ததாகவும் பல தகவல்களை வெளியிட்டார்.

### கட்சித் தலைமை குடும்பச் சொத்தா?

இறந்தவர் கதைப்பதில்லை. ஆகவே டட்லியின் இக் கதைகள் உண்மையா என்பதை கேட்டறிய முடியாது. அதே கிழமையில் வெளிவந்த போயாதின ஒப்சேவர், பத்திரிகை டாக்டர் மலலசேகராவின் பழைய நினைவுகள் என்ற கட்டுரையை வெளியிட்டது. அதில் 1959-ல் ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா தனக்கு சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை அளித்ததாகவும் அதை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தியதாகவும் டாக்டர் மலலசேகரா கூறியுள்ளார்.

இக்கதைகள் உண்மையானல் சுதந்திரக் கட்சியின் தலைமை பல முறை விலை கூறி விற்கப் பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் சில மனிதர்கள் கட்சித் தலைமை தமது குடும்பச் சொத்து எனவும் தாம் விரும்பிய படி கையளிக்கலாம் என எண்ணுவதாகவும் தெரிகிறது. நாம் வாயளவில் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பற்றிப் பேசினலும் கூட. நாம் இன்னும் நிலப்பிரபுத்துவ கட்டத்திலிருந்து விடுபடவில்லைப் போல் தெரிகிறது. ஒரு சேனநாய்க்காவோ ஒரு பண்டாரநாயக்காவோ யார் கட்சிகளுக்கு தலைமை தாங்குவது என்பதையும், தமது அடுத்த பதவியாளரைக் கூட கலந்து கொள்ளாமல் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்க கூடிய அளவுக்கு உள்ளது போல் தெரிகிறது.

மீண்டும் யு.என்.பி.யிலுள்ள பூசலுக்கு வருவோம். டட்லி (அன்றைய கூட்டத்தில்) கூறியதற்கு உடனே ஜே. ஆர். பதிலடி கொடுத்தார். 1956-ல் யு. என். பி. முற்ருக தோற்கடிக்கப்பட்டதன்பின் யு. என். பியைக் கலைத்து விட டட்லி விரும்பியதாக ஜே. ஆர். சொட்டை விட்டார். இவ்விதம் கூறியதன் மூலம் ஜே. ஆர். தனது அரசியலின் அந்திய காலத்துக்கு வந்துவிட்டாரா அல்லது அரசியல் தலைமறைவைப் பற்றி சிந்திக்கிருரா அல்லது (அனுதாபத்தின் மூலம்) ஆதரவைப் பெற முயன்ருரா என்பது தெளிவாக வில்லை.

### ஈரியகொல்லையின் தரகர் வேலை

அக் கூட்டத்தின் மூலம் நிலவிய பூசல் தீர்க்கப்படவில்லை என்பதை ஈரியகொல்லை எடுத்துக் காட்டியுள்ளார். சுதந்திரக் கட்சிக்கும் யு. என். பிக்கும் இடையில் முடிச்சுப் போட தரகு வேலை பார்த்தற்காக ஈரிய கொல்லையை ஜே. ஆர். மிகவும் கடுமையாகத் தாக்கினர். ஆனல் ஜே. ஆர். நாட்டை விட்டு கிளம்பியவுடன் வெளிப்படையாக யுத்த களத்திற்கு ஈரிய கொல்லை மீண்டும் இறங்கியுள்ளார். இப்பொழுது ஐந்த கட்சிகளுடன் இணைந்துள்ள யு. என். பி. மற்றுமொரு கட்சியுடன் இணைவதில் என்ன தவறு இருக்கிறது என வெளிப்படையாகவே அவர் கேள்வியை எழுப்பியுள்ளார்.

யு. என். பிக்குள் உள்ள தகராறுகளுக்கு மத்தியில் தமிழரசுக் கட்சியும் அரசாங்கத்திலிருந்து வெளியேறப் போவதாக பயமுறுத்தி தலையிடியைக் கூட்டுகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள நிலமையைச் சமாளிப்பதற்காகவே இவ்வித பயமுறுத்தல்களை தமிழரசுக் கட்சி செய்கிறது என்ற பொழுதிலும் அது யு. என். பிக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. ஒரு மந்திரி முக்கிய எதிர்க் கட்சியுடன் இணைய வேண்டும் என கூறிக் கொண்டு திரிய, யு. என். பி. பாராளுமன்ற உறுப்பினர்களே சுதந்திரக் கட்சியிடம் நியமனம் கோர, கூட்டுக் கட்சிகளில் ஒன்று வெளி ஏறப்போவதாக பயமுறுத்த நிச்சயமாக எந்த அரசாங்கத்தாலும் அமைதியாக நம்பிக்கையோடு இருக்க முடியாது.

யு. என். பி. யின் அரசியல் பங்கலோட்டுத்தனத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினையின் அறிகுறிதான் இது. நீரில் மூழ்கின்ற கப்பலிலிருந்து தப்பித்துக் கொள்ள எலிகள் தயாராகின்றன. ஆனல் எலிகளோடு சேர்ந்து கப்பலை மூழ்கடிக்க நேரத்துக்கு எதிர் கட்சிகளால் ஒன்றுபட முடியாதா?


## மா ஓவின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | சிறையில் செங்கொடி அதிகாரம் நிலைத்திருக்க முடிவது ஏன் | -/25 சதம் |
| 2 | சீன சமுதாயத்திலுள்ள வர்க்கங்களின் ஆராய்வு | -/35 சதம் |
| 3 | நடைமுறை பற்றி | -/40 சதம் |
| 4 | தலைமை பற்றி | -/20 சதம் |
| 5 | ஐக்கிய முன்னனிக்குள் தனித்துவம் | -/20 சதம் |
| 6 | மா ஓவின் மேற்கோள்கள் | 1. 75 சதம் |
| 7 | வாலிபர் இயக்கம் | -/20 சதம் |
| 9 | இலக்கியத்தையும் கலையையும் பற்றிய யெனன் கருத்தரங்கில் உரைகள் | -/75 சதம் |

தபால் செலவு தனி

தொழிலாளி பிரசுராலயம்
102, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.



◎ நாற்றமடிக்கும் சாதிமுறையைத் தகர்த்தெறிய

◎ நாசகார முதலாளித்துவ சுரண்டல் முறைக்கு முடிவு காண

◎ ஏழு கட்சி எத்தர் ஆட்சிக்கு சாவுமணி அடிக்க

◎ தமிழ் மக்களை ஏலம் போட்டு தமக்கு பதவி தேடும் தமிழரசு, தமிழ் காங்கிரஸ் தம்பிரான்களுக்கு சவக்குழி தோண்ட

## பொதுக்கூட்டம்

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தடியில்
**30-11-67 பி. ப. 5 மணிக்கு**

தலைவர்: கே. ஏ. சுப்பிரமணியம்

பேச்சாளர்கள்: என். சண்முகதாசன்,
ஹிக்கொட தர்மசேன,
டாக்டர் எஸ். வீ. சீனிவாசகம்,
கே. டானியல், கரவைக் கந்தசாமி,
எம். முத்தையா, எம். கே. அந்தனிசில்,
ப. கிருஷ்ணன், கே. செந்திவேல்,
எஸ். இராசா

ஊர்வலம் பிற்பகல் 3 மணிக்கு
நுணுவில் சந்தியிலிருந்து ஆரம்பமாகும்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி


### ஏஜெண்டுகளுக்கு அறிவித்தல்

பாக்கிப் பணத்திற்கான பில்கள் ஏற்கனவே அனுப்பட்டுள்ளன. தயவு செய்து உடனடியாக பாக்கிப் பணத்தை அனுப்பி வைக்கவும். இல்லையாயின் முன்னறிவித்தலின்றி பத்திரிகை நிறுத்தப்படும்.

நிர்வாகி

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'', அச்சகம் 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2.